www.media.gov.lk

ඇසි දිසි

විසිල 2

# செவிப்புல கட்புல ஊடக மீள்நோக்கு

2011 - 2 - 26

302.02.057

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.media.gov.lk

# செவிப்புல கட்புல ஊடக மீள்நோக்கு

தொழில்சார் ஊடகவியலாளர்களின் அறிவு மற்றும் திறன் என்பவற்றினை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சு, அரசாங்கத் தகவல் திணைக்களத்துடன் இணைந்து மூத்த ஊடகவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் நடத்தப்படும் 2011ம் ஆண்டின் மாதாந்த செயலமர்வுத் திட்டத்தின் இரண்டாவது செயலமர்வு 2011.02.26ம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் "மிஹிலக்க மண்டபத்தில்" நடைபெற்றது.

அதில் இடம்பெற்ற விரிவுரைகளின் சாராம்சத்தை உள்ளடக்கி இவ்வெளியீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**தகவல் ஊடகத்துறை அமைச்சு**
2011.02.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெறுமனே அரசியல் நோக்கங்களுக்காக ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கு பதிலாக நாட்டின் நற்பெயர், அபிவிருத்தி, தேசியத்துவம் மற்றும் சமூக ரீதியான ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றிற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் ஊடகத்தை சுயகட்டுப்பாட்டுடன் பயன்படுத்தல் வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். அதனால் வளர்ச்சிகண்ட ஊடகக் கலாசாரம் ஒன்றின் நிமித்தம் அனைத்து ஊடகவியலாளர்களையும் அறிவாலும், அனுபவத்தாலும் பலப்படுத்துவதே எனது கொள்கையாகும்''

மஹிந்த ராஜபக்ஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## දැක්ම/ நோக்கு/ Vision

"හොඳින් දැනුම්වත් වූ ප්‍රඥාවන්ත සමාජයක්"

நன்றாக அறிவூட்டப்பட்ட புத்திமிகு சமூகம் ஒன்று.

A well-informed discerning society.

## මෙහෙවර/ செயற்பாடு/ Mission

"ජනහිතකාමී වූත්, සංවර්ධන නම්‍ය වූත්, නිදහස් සහ වගකීම් සහිත ශ්‍රී ලාංකේය ජනමාධ්‍ය කලාවක් ස්ථාපිත කිරීම සඳහා අවශ්‍ය පහසුකම් සැලසීම"

மக்கள் சார்பான அபிவிருத்தி சார்ந்த சுதந்திரமும் பொறுப்புமிகு இலங்கைக்கான ஊடகக்கலையை ஸ்தாபிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல.

Achieving excellence in the total practice of media by facilitating to usher in a people-friendly, development oriented, free and responsible Sri Lankan media culture.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க தகவல் திணைக்களம்

### දැක්ම/ நோக்கு/ Vision

"ශ්‍රී ලංකාව ආසියාවේ ආශ්චර්යවත් මාධ්‍ය සම්ප්‍රදාය ඇති රට බවට පත් කිරීම"

தகவல் பரிவர்த்தனையை செயல் விளைவு உள்ள வகையில் வலிமையூட்டுதல்.

To strengthen informative communication effectively.

### මෙහෙවර/ செயற்பாடு/ Mission

"ශ්‍රී ලාංකික සන්නිවේදන මාධ්‍ය අතර සුහදශීලී පරිසරයක් නිර්මාණය කිරීම සඳහා අවශ්‍ය මෙහෙයවීම් සිදු කරමින්, තොරතුරු හා රජයේ දැක්ම දැන ගැනීමට මහජනතාවට ඇති අයිතිය තහවුරු කිරීම, ශ්‍රී ලාංකික සන්නිවේදන මාධ්‍ය සංස්කෘතිය මහජනයාට ඇති අයිතිය තහවුරු කිරීම."

சுதந்திரம், பொறுப்பு மற்றும் வேறுபடுதல்களுக்கு மதிப்பளித்து, சமூக மேம்பாட்டிற்காக ஊடகங்கள் மத்தியில் சிநேகபூர்வ சூழலை ஏற்படுத்துவதன் மூலம் தகவல் கலாசாரத்தை வலுவடையச் செய்தல.

To foster information culture by creating a friendly environment amongst the media with regard for freedom, responsibility and diversity for the advancement of the society.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ், சிங்கள், முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த தமிழ் மொழி கட்டாயமாக்கப்பட்டிருக்க வேண்டும்

ஊடகவியலாளர்களுக்காக நீண்டகாலமாக நடத்தப்பட்டு வந்த ஒரு நாள் செயலமர்வு ஏதோ ஒரு காரணத்தினால் நடத்தப்படாமல் கைவிடப்பட்டு மீண்டும் நான் ஊடகத்துறை அமைச்சராக வந்ததன் பின்னர், செயலாளர் கணேகல அவர்களின் முயற்சியின் பயனாக மீண்டும் செயலுருவம்பெற ஆரம்பித்துள்ளது.

நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட செயலாளர் உட்பட அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

சீலரட்ணசெனரத் அவர்கள் பேசும் போதும், ஊடகவியலாளர்களுடன் பேசும் போதும், அவருக்கென தனித்துவம் இருக்கிறது. உரிமையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் வல்லமையும் அவரிடம் உள்ளது. நான் உண்மையிலேயே மனம் வருந்துகிறேன். ஏனெனில் எனக்கும் செயலாளருக்கும் இல்லாத ஒரு தனித்துவம் அவரிடம் இருக்கிறது. அதுதான் மொழி ஆற்றல்.

மொழி ஆற்றல் எமக்கு மிகவும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒரு பிரச்சினை தான். சீலரட்ண செனரத் அவர்கள் அந்த மொழி ஆற்றலினால் இங்குள்ள தமிழ் ஊடகவியலாளர்களுடன் மிகவும் நெருக்கமாக அவர்களது மனதை தொடும் விதத்தில் அவர்களது மொழியிலேயே உறையாற்றினார். உண்மையில் நான் மனம் வருந்துகிறேன். அந்த ஆற்றல் எமக்கில்லை என்பதை நினைத்து நான் வெட்கப்படுகிறேன்.

உண்மையில் இந்த நாட்டின் மக்கள் என்ற வகையில் அதிகளவு உணர்கின்ற ஒரு முக்கிய பிரச்சினைதான் இந்த மொழிப் பிரச்சினை.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதலே தமிழ்மொழி கட்டாயமாக்கப்பட்டிருந்தால் எமது நாடு இதை விட பல மடங்கு நட்பு ரீதியான சமூகத்தை கொண்டதாக இருந்திருக்கும். ஊடகத்துறை மட்டுமல்ல, சமூக ரீதியாகவும் உலகத்துக்கு எடுத்துக்காட்டாக இருந்திருக்க முடியும். நாம் நல்ல ஒரு சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டோம்.

என்றாலும் நாம் இன்னும் காலம் கடந்து விட்டவர்கள் அல்ல. தமிழ், சிங்கள மக்களிடையே அன்னியோன்ய புரிந்துணர்வை வளர்ப்பதற்கு ஊடகங்கள் ஊடாகவேணும் மொழியை கற்க உதவிகள் செய்ய வேண்டும். நாம் ஆறடி நிலத்துக்குள் போகும் வரை கற்க முடியும். மனிதன் என்பவன் வாழ்நாள் முழுவதும் கற்க முடியும். எனவே தமிழ், சிங்கள மொழியை கற்பிக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

தற்போது அரச நிர்வாகத் துறையில் தமிழ் மொழியை கற்கும் நடைமுறை அமுலில் இருக்கிறது.

நான் உங்கள் மத்தியில் தமிழ் மொழியில் உரையாற்றக்கூடியவனாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். நீங்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பீர்கள். மொழி ஆற்றல் எனக்கு இல்லை என்பதால் உண்மையிலேயே இதய பூர்வமாக மனம் வருந்தினேன்.

இது உண்மையிலேயே பெரும் குறையாகவே காண்கிறேன். மனதார நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பெரும் குறையாக கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1–

சுதந்திரத்தின் பின்னர் மாறிமாறி ஆட்சிக்கு வந்தவர்களினால் கணக்கெடுக்கப்படாத, அவதானம் செலுத்தப்படாத, இதனாலேயே பேரழிவுகளை ஏற்படுத்துவதற்கு பிரதான காரணமாகவிருந்த, மக்களிடையே புரிந்துணர்வு, ஒற்றுமை போன்றவற்றை சீர்குலைக்க ஏதுவாக இருந்த மொழிப் பிரச்சினையை, 65 வருடங்களின் பின்னராவது கண்டுபிடித்திருக்கிறோம்.

இப்போது இதனை கலைவதற்கு நடவடிக்கைகளை எடுத்துவரும் சந்தர்ப்பத்தில், ஊடகங்களுக்கு இதில் பெரும் பங்கு இருக்கிறது. ஊடகங்கள் இதற்காக மிகவும் பெறுமதியான பங்களிப்புகளை செய்ய வேண்டும்.

உலகத்தில் கல்வி, அறிவு என்ற இவ்விரண்டையும் பூர்த்தி செய்ததாக எவரும் இல்லை. தினமும் நாம் கற்கிறோம். புத்தகத்தின் ஊடாக மட்டுமல்ல, தொழில் ஸ்தாபனம், சூழல் எதுவாகவும் இருக்கலாம். அனைத்திலும் இருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரை கற்கமுடியும். கற்பதற்கு கட்டுப்பாடுகள் இல்லை.

கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது நாங்கள் தான். கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டால், நான் ஏன் இந்த செயலமர்வுக்கு செல்லவேண்டும் இன்று விடுமுறை நாள். இந்த செயலமர்வுக்குச் சென்று என் காலத்தையும் நேரத்தையும் ஏன் செலவு செய்ய வேண்டும். வீட்டில் இருந்தபடி கிரிக்கெட் மெட்ச் ஒன்றை பார்ப்போம் என நினைப்பதுடன், நான் ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளர், எனக்கேன் இவையெல்லாம் என்று நினைப்பதுடன், எமக்கு எதனை கற்பிக்க போகிறார்கள் என்று நாங்கள் நினைப்போமானால், எமது கல்வி அறிவு அத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுவிடும்.

பிறந்த நாள் முதல் இறக்கும் நாள்வரை நாம் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் இவ்வாறான செயலமர்வுகள் எமக்கு துணை புரியும். சகல துறைகளிலும் இவ்வாறான செயலமர்வுகள் நடத்தப்படுதல் அவசியம். இவை பெறுமதிமிக்கதாக அமைகின்றன.

இவர் தமிழர், இவர் சிங்களவர், இவர் முஸ்லிம் என நாம் ஒவ்வொருவருக்கும் லேபல் குத்திவிட்டு பிரித்துப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழர் என்றோ, முஸ்லிம் என்றோ, சிங்களவர் என்றோ நோக்கப்படுவது அவரவரது தனிப்பட்ட விடயம். நான்கு சுவர்களுக்குள் இருக்க வேண்டிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தை சமுதாயத்தின் மத்தியில் கொண்டு வந்து முரண்பாடுகளை ஏற்படுத்தி பிரச்சினையாக்கி விட்டிருக்கிறோம்.

இவற்றை கலைவதற்கு இவ்வாறான செயலமர்வுகளில் கலந்துகொண்டு சகலருடனும் கருத்துப் பரிமாற்றங்களை செய்வதுடன் சமூகத்துக்கு நற்செய்திகளை ஊடகங்கள் ஊடாக கொண்டு செல்ல வேண்டும்.

**கெஹலிய ரம்புக்வெல்ல**
*தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுபூர்வமான சமூகம் இறுதி இலக்குக்குச் செல்வதற்கு பொறுப்பு வாய்ந்த ஊடகக் கலாச்சாரமொன்று அவசியம்

வெகுஜன ஊடக அமைச்சு அரசாங்க தகவல் திணைக்களத்துடன் இணைந்து 2011ஆம் ஆண்டு நடத்தும் 2ஆவது கருத்தரங்கில் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். 2005ஆம் ஆண்டும், 2009 ஆம் ஆண்டும் இதேபோன்ற கருத்தரங்குகளை நாம் நடத்தியிருந்தோம். ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்லவின் பணிப்புரைக்கமைய நாம் இந்தக் கருத்தரங்கை நடத்துகிறோம்.

இவ்வாறான கருத்தரங்குகள் உள்ளிட்ட பல்வேறு வழிகளின் ஊடாக ஊடகவியலாளர்கள் தமது புதிய சிந்தனைகள், புதிய தொழில்நுட்பத்திறன் போன்றவற்றை வளர்த்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செலுத்தவேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதில் ஊடகங்களுக்குப் பாரிய பங்கு உண்டு. அதேபோல, அபிவிருத்தியின் பலன்கள் மக்களைச் சென்றடையச் செய்யும் பொறுப்பும் ஊடகங்களுக்கு உண்டு. அதேநேரம், மக்கள் தம்மைச் சுற்றி என்ன நடைபெறுகிறது என்பதை அறியவேண்டும். அதற்கு தகவல்கள் தொடர்ச்சியாக செல்ல வேண்டும். அறிவுபூர்வமான சமூகம் இறுதி இலக்குக்குச் செல்வதற்கு பொறுப்பு வாய்ந்த ஊடகக் கலாசாரமொன்று அவசியம். மக்கள் தீர்மானங்களை எடுக்கும் விடயத்திலும் ஊடகங்கள் கணிசமாக பங்களிக்கின்றன. எமது ஊடகங்கள் அபிவிருத்தியடையவேண்டும். இதற்கு நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலத்தில் இலக்குகளை அடைவதற்கான திட்டம் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல தலைமையில் ஆரம்பித்துள்ளது. மஹிந்த சிந்தனையின் புதிய ஊடகத்துக்கான வழி எனும் பிரிவை நோக்கினால் ஜனாதிபதி அவர்கள் ஊடகத்துறையிலுள்ளவர்களுக்குப் பல்வேறு வேலைத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளமை புலனாகும். இவற்றில் பெரும்பாலானவை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டன. ஊடகத்துறைக்கான உபகரணங்களை வாங்குவதற்கான கடன் திட்டங்கள், உயர்கல்வியைத் தொடர்வதற்கான கொடுப்பனவுகள் அல்லது இலவச அனுமதிகள் என பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழேயே இந்த கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்துகொள்ள வந்திருக்கும் அனைவரையும் வரவேற்பதுடன், இதிலிருந்து பூரண பயனைப் பெற்றுக்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கிறேன்.

இறுதியில் இவ்வாறான கருத்தரங்கை நடத்துமாறு பணிப்புரை வழங்கியமைக்கும், இதற்கான அனைத்து வசதிகளைச் செய்து கொடுத்தமைக்கும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன், இன்றைய கருத்தரங்கில் கருத்துரைகளை வழங்கவிருக்கும் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன், எம்.எஸ்.எம்.ஐயூப், கச்சி மொஹமட், யசோதரா கதிர்காமத்தம்பி ஆகியோருக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், இக்கருத்தரங்கை நடத்துவதற்கு உறுதுணையாகவிருந்த லேக்ஹவுஸ் ஆசிரியர் பீடப்பணிப்பாளர் சீலரட்ண செனரத் மற்றும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.தில்லைநாதன் ஆகியோரின் முயற்சிகளையும் நான் பாராட்டுகிறேன்.

இந்தக் கருத்தரங்கு உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைய எனது வாழ்த்துக்கள்.

நன்றி

**டபிள்யூ.பி. கணேகல**
*ஊடகத்துறை அமைச்சின் செயலாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஊடகங்கள் அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் நாம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது

உங்கள் எல்லோருக்கும் என் இனிய காலை வந்தனங்கள்.

ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அவர்களுக்கும், அமைச்சின் ஊடக செயலாளர் டபிள்யூ.பி. கணேகல அவர்களுக்கும் எனது நன்றிகள்.

ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்துள்ள இச் சந்தர்ப்பத்தில் முதன் முறையாக தமிழ் மொழி மூலம் இந்த பயிற்சிப் பட்டறை நடைபெறுகிறது.

ஊடகத் துறையினருடன் மிக நெருக்கமான உறவுகளை கொண்டுள்ள அமைச்சர் என்ற வகையிலும், ஊடகவியலாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்பவர் என்ற வகையிலும், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் ஆலோசனைப்படி இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான் நினைக்கிறேன் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்குத்தான் அதிகளவு கேலிச் சித்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் ஊடகவியலாளர்கள் மத்தியில் அவர் மிகவும் பிரபல்யமானவர் என்பதை கூற விரும்புகிறேன்.

அமைச்சர் மட்டுமல்ல அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. கணேகல அவர்களும் ஊடகவியலாளருடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பவர். சற்று முன் அவர் என்னிடம் பேசும் போதும் இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலமர்வு பற்றி பேசிக் கொண்டிருந்தார். பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் இதே போன்று செயலமர்வு நடத்த வேண்டுமென குறிப்பிட்டார்.

நான் சிறிய காலத்திலிருந்தே தமிழ், முஸ்லிம் சமுதாயத்தின் மத்தியில் பிறந்து வளர்ந்து கல்வியை கற்றேன். தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமல்ல தமிழ் மொழியை நான் ஆதரிக்கிறேன். எனவே, எனது உரையில் தமிழ் பிழைகள் இருப்பின் மன்னித்துக் கொள்ள வேண்டும்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மத்தியமாகாணத்தின் கண்டியை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அங்கு பெரும்பாலும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் பாராளுமன்றம் வந்தவர். அதே போல் செயலாளர் டபிள்யூ.பி. கணேகல அவர்களும் திறமைமிக்க ஒரு அதிகாரி.

எமது நாட்டின் சமூக அமைப்பையும், கலாசார பாரம்பரியங்களையும் நோக்கும் போது எமது நாட்டின் அழகைப் போன்றே மனம் கவரக்கூடியதாகவும் இருக்கிறது. ஒரு பூந்தோட்டத்தில் பலதரப்பட்ட அழகிய மலர்கள் இருப்பது போல் பல விதமான கலாசார விழுமியங்களையும், பல்லின மக்களையும், கலாசாரத்தையும் கொண்ட இந்த நாட்டை நாம் அனைவரும் கட்டியெழுப்புவோம்.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற திட்டங்கள் இந்த மக்களின் நலன் கருதியே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் ஜனநாயகத்தின் 4ஆவது தூணாக கருதப்படும் ஊடகங்களும் தத்தமது பங்களிப்பை செய்து வருகின்றன.

இன்று நாட்டில் சட்டமும், ஒழுங்கும் சீராக இருப்பதால் ஊடகங்களுக்கு தமது பணியை சீராக செய்து வருவதற்கு தடைகள் இல்லை என்றே நினைக்கிறேன். பல ஊடகங்கள் அரசை விமர்சிக்கின்றன. அரசின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுகின்றன. பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்களை முன் வைக்கின்றன. தத்தமது கருத்துக்களை முன்வைக்க எவ்வித தடைகளும் இல்லை.

இச்சூழ்நிலையில் எமது சமூகத்தின் நலன்கருதி பணியாற்ற ஊடகங்களுக்கு பெரும் பங்குண்டு. இதனை கருத்திற்கொண்டே இவ்வாறான கருத்தரங்குகளை நடத்துகிறோம். இவ்வாறான அறிவுபூர்வமான சமூகம் இறுதி இலக்குக்குச் செல்வதற்கு பொறுப்பு வாய்ந்த ஊடகக் கலாசாரமொன்று அவசியமென நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விடைபெறுவதற்கு முன் நான் உங்களுக்கு மிக முக்கியமான விடயத்தை கூற வேண்டும். இவ்வாறான கருத்தரங்குகள் மிகவும் முக்கியமானவை. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைப்பதும் உங்களது பாக்கியம்தான். ஏனென்றால் பல ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் ஒரு இடத்திற்கு வந்து குழுமி இருப்பின் தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்ள முடியும்.

ஊடகவியலாளருக்கு இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. கணேகல அவர்களுக்கு எனது நன்றிகள்.



**சீலரட்ண செனரத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சமூகத்தை அறிவுச் சமூகமாக மாற்றும் கடமை ஊடகவியலாளர்களாகிய உங்களது கடமை

ஊடகவியலாளரின் பணி மிகவும் இன்றியமையாதது. உங்கள் பணி முக்கியமான ஒன்று சொல்வதற்கான குறிகாட்டி. இன்டிகேடர் பற்றி நான் குறிப்பிடுகின்றேன்.

ஒரு குறிகாட்டி பற்றி கூறலாம். இங்கே மூத்த ஊடகவியலாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள் என பலரும் வந்திருக்கின்றீர்கள். ஊடகவியலாளர்கள் என்றதும் உங்களைப்பார்த்து பயப்படுபவர்கள் உலகத்தில் ஏராளம். அதிகாரத் தரப்பில் உள்ளவர்கள் மட்டுமல்ல. உலகத்தில் பலரும் ஊடகவியலாளர்கள் என்றதும் சற்று பயப்படுவார்கள்.

ஊடகவியலாளர்கள் ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். என்னை தனிப்பட்ட முறையில் உலகுக்கு வெளிக்கொணர்ந்ததும் ஊடகம் தான். நான் 40 ஆண்டுகாலம் ஆசிரியராக பணிபுரிந்திருக்கிறேன். பல்கலைக்கழகத்தில் சுமார் 40,50 மாணவர்களுக்கு கல்விக் கற்றுக் கொடுத்தேன். எனினும் என்னை வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியது தினகரன், வீரகேசரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகள் தான். அதுமட்டுமல்ல தொலைக்காட்சி, வானொலிகளும் என்னைப்பற்றி வெளிச்சம் போட்டு காட்டின.

நான் எனது மாணவர்களுக்கு மட்டும் கற்பிப்பதில் பலனில்லை. எனது கருத்துக்கள் இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவ வேண்டுமென நான் கருதினேன். அதற்கு நான் இந்த ஊடகங்களைத் தான் பயன்படுத்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது ஒரு விடயம் மக்கள் மத்தியில் சென்றடைய ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. இந்நாட்டில் சுமார் 9,400 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் சுமார் 40 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இலங்கையின் சனத்தொகையில் ஒப்பிடும் போது இத்தொகை சுமார் ஐந்தில் ஒரு பங்காகும்.

பாடசாலையில் கற்பிக்கும் போது சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு பேருக்கு மட்டும் கல்வி சென்றடையாமல் அனைவருக்கும் சென்றடைய வேண்டும். முழு சமூகமுமே கற்க வேண்டும். முழு சமூகமுமே கற்க வேண்டும் என்றால் அவர்கள் அனைவரையுமே பாடசாலைக்கு அழைத்து வந்து கற்பிக்க முடியுமா?

மக்களுக்கு விழிப்பூட்டும் பல விடயங்கள் உள்ளன. அவை எய்ஸ்ட் விழிப்புணர்வு போன்ற பல விடயங்கள் உள்ளன. இவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது இந்த ஊடகங்களே. பாடசாலைகள் ஊடாக இவற்றை கொண்டு செல்ல முடியாது.

யுனெஸ்கோ ஒரு கருத்தரங்கொன்றை நடத்தியது. 18 வயதிற்குட்பட்டவர்களின் அறிவுத் தொகுதி பற்றிய கணக்கெடுப்பொன்றையே நடத்தியது. அறிவுத் தொகுதி எந்தளவிற்கு இருக்கிறது. இதனை எப்படி பெற்றுக் கொள்வார்கள் என்பது பற்றி ஆராய்ந்தது. 20 வீதமானவர்கள் பாடசாலைகள் ஊடாக பெற்றுக் கொள்வார்கள். 80 வீதமானவர்கள் வேறு வழிகளில் பெற்றுக் கொண்டார்கள். ஊடகங்கள், நண்பர்கள், வெளியாரின் ஊடாக இந்த அறிவைப் பெற்றுக் கொண்டார்கள். ஊடகங்கள் இதற்காக பெரும் பங்களிப்பை செய்திருக்கிறது. ஊடகங்கள் முக்கியமான கல்விப் பணியை செய்து வருகிறது.

அதாவது 80 விதமான அறிவை நாம் வேறு வழிகளின் ஊடாக பெற்றுக் கொண்டுள்ளோம். வேறு வேறு வழிகள் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால் அவை ஊடகங்கள்தான் என்பது புலனாகிறது.

ஊடகவியலாளர்கள் ஒரு டாக்டரைப் போன்றவர்கள். ஒரு சட்டத்தரணியைப் போன்றவர்கள். நான் எனது வாழ்க்கையை ஆசிரியராக ஆரம்பித்தேன். ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரியராக கடமையாற்றுபவன் ஆசிரியர் சரியில்லை என்றால் அதற்கும் நான்தான் காரணம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவராக செல்பவர் மருத்துவத்துறையை தெரிவு செய்து செல்கிறார். சட்டத்தரணியாக செல்பவர் சட்டத்துறையை தெரிவு செய்து செல்கிறார். ஆனால், இந்த ஆசிரியர் தொழிலுக்கு அந்தத் துறையை தெரிவு செய்து செல்வதில்லை. பிள்ளைகளேயே பிடிக்காதவன் ஆசிரியராக இருப்பார். ஊடகவியலாளர்கள் இந்தத் துறைக்கு ஏதோ ஒரு விதத்தில் ஈர்க்கப்பட்டு ஊடகவியலாளர்களாக வந்துள்ளீர்கள்.

வேறு தொழில் ஏதும் இன்றி இதற்குள் நுழைந்தவர்கள் அல்ல. வேறு தொழில் இல்லாமல் வேண்டுமானால் ஆசிரியராக சென்று பிள்ளைகளை ஏமாற்றலாம்.

ஊடகவியலாளர்களாக சென்று தினகரன், வீரகேசரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் ஏமாற்று வேலைகள் செய்ய முடியாது. ஊடகவியலாளன் என்பவன் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டு இருக்க வேண்டியவர். சட்டத்தரணிகளாக போகிறவர்கள் சட்டத்தை கற்று கொள்கிறார்கள். மருத்துவர்களாக போகிறவர்கள் மருத்துவத் துறையில் கற்று செல்கிறார்கள். ஆனால், ஆசிரியர் தொழிலுக்கு சொல்பவர் அதனை விரும்பிச் செல்வதில்லை.

ஒவ்வொரு ஊடகவியலாளனுக்கும் ஒரு துறை இருக்க வேண்டும், இருக்கிறது. சிலர் சட்டத்துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை என ஒரு துறையை தெரிவு செய்வதுடன் அதில் அவர்கள் திறமையானவர்களாக இருப்பார்கள். கல்வித்துறையில் இலங்கையில் கல்வி, இந்தியாவில் கல்வி, உலகத்தில் கல்வியென ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கல்வி தொடர்பாக ஆராய்ந்து, இன்று நான் பேராசிரியராக இருக்கிறேன். அதே போல் ஊடகவியலாளர்களும் தமக்கென்று ஒரு துறையை தெரிவு செய்து அதன் ஊடாக சமூகத்திற்கு தேவையானவற்றை வழங்குபவர்கள்.

ஆசிரியர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்குமிடையில் என்ன வித்தியாசம் என்பதைப் பார்ப்போம்.

ஆசிரியர் என்பவன் பாடசாலையில் மாணவர்களுக்கு கல்வி புகட்டுபவர்கள். நான் பேராசிரியர். பல்கலைக்கழகத்தில் சுமார் 40, 50 மாணவர்களுக்கு கற்பிக்க முடியும். மக்களுக்கு எவ்வாறு அறிவூட்ட முடியும்? வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கற்றுத் தருகிறேன் எனக் கூறி வெள்ளவத்தை மார்கட்டில் நின்று அனைவரையும் அழைத்து கற்பிக்க முடியுமா?

பல்கலைக்கழகத்தில் கற்பிக்கும் போது சுமார் 30,40 மாணவர்கள் இருந்தார்கள். சிலர் வரவும் மாட்டார்கள். சில வேளை 10 பேர் மட்டுமே இருப்பார்கள். அப்போது நாம் கற்பிக்கும் விடயம் 10 பேருக்கு மட்டுமே சென்றடையும்.

ஆனால், ஊடகவியலாளர் ஒருவர் எழுதும் ஒரு விடயம் பல லட்சம் பேரை சென்றடைகிறது. பல்கலைக்கழக பேராசிரியர், பாடசாலை ஆசிரியர், இதே போன்று, பத்திரிகை ஆசிரியர் என பத்திரிகையிலுள்ளவர்களை கூறுவார்கள். அதற்காக ரி.வியிலிருக்கும் ஒருவரை ரி.வி. ஆசிரியர் என்று கூற முடியுமா?

பத்திரிகை ஆசிரியர், உதவி ஆசிரியர் என்பதைப் போன்று Editor என்றால் செம்மைப்படுத்துநர் என்று பொருள்படும். அவர்கள் செம்மைப்படுத்துபவர்கள் பத்திரிகையிலுள்ளவர்களை ஏன் நாங்கள் ஆசிரியர் என அழைக்கிறோம். ஏனென்றால் அவர்களும் பத்திரிகைகளினூடாக கற்பிப்பவர்கள். செய்திகள் மட்டுமல்ல, கல்வி சார்ந்த அனைத்து விடயங்களையும் மக்களுக்கு கற்பிக்கிறார்கள்.

கல்வி என்பது, முன்பு ஒருசிலருக்கு மட்டுமே கற்கக் கூடியதாக இருந்தது. சகலருக்கும் கல்வி என்பது தற்போது தான் நடைமுறையில் உள்ளது. வரலாற்று ரீதியாக பார்த்தால் ஒரு சிலருக்கு மட்டும்தான் கல்வி என்ற நிலை இருந்து வந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் சாதி என்ற ஒரு விடயத்தை மையப்படுத்தி கல்வி இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. இங்கு நாம் அடையாள அட்டை வைத்திருப்பது போன்று சாதி சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். குறைந்த சாதியினர் படிக்கக்கூடாது. புத்தகங்களை தொடக்கூடாது என்ற நிலை இருந்தது. பாடசாலைக்கு போகக்கூடாது. இன்றும் கூட இந்தியாவில் இட ஒதுக்கீட்டு கொள்கை நடைமுறையில் இருந்து வருகிறது.

அன்றைய நிலைபோல் அல்ல இப்போது. சகலருக்கும் கட்டாயக் கல்வி Education For all என்ற கொள்கை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. யாவருக்கும் கல்வி, இதனை யார் வழங்கலாம்? பாடசாலைகளில் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி விட முடியாது. இன்று 9,700 பாடசாலைகள் உள்ளன. இவற்றினால் மட்டும் கல்வியை வழங்கி விட முடியுமா? 9,700 பாடசாலைகளின் ஊடாக பிள்ளைகளுக்குத்தான் கல்வி வழங்க முடியும். மக்களுக்கு வழங்க முடியுமா? மக்களுக்கு கல்வியை வழங்கும் பணி மிகவும் கட்டாயமானது.

நான் இங்கு சமூகங்கள் எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை பற்றியும் கூற வேண்டும். உங்களுக்கு தெரியும் முன்பு விவசாய சமூகம் இருந்தது. இரண்டாவதாக கைத்தொழில் சமூகமாக மாறியது.

விவசாய சமூகம் முடிவடைந்து கைத்தொழில் சமூகம் முடிவடைந்து இப்போது உலகளாவிய ரீதியில் அறிவுசார்ந்த சமூகம் உருவாகியுள்ளது. இதற்கு மற்றுமொரு பெயரிலும் அழைக்கலாம், தகவல் சமூகம்.

இப்போது நாம் விவசாய சமூகம், கைத்தொழில் சமூகம், அறிவுசார்ந்த சமூகம், தகவல் சமூகம் என்பவற்றுக்கு மத்தியில் வாழ்கிறோம். தொழிற்கலை சமூகத்திலிருந்து அறிவுச் சமூகத்திற்கு பிரவேசிக்கின்றோம்.

இதென்ன தகவல் சமூகம், இதென்ன அறிவுச் சமூகம். இரண்டும் ஒன்றா? என நீங்கள் சிந்திக்கலாம்.

தரவிலிருந்து தகவல், தகவலிருந்து அறிவு, அறிவின் ஒரு உச்சக்கட்டமே ஞானி என்கிறோம். தரவிலிருந்து தகவலை உருவாக்கி அதனூடாக அறிவை கொடுக்க வேண்டும். நாம் இன்று அறிவுச் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உற்பத்தித் துறைக்கு இன்று நாம் அறிவைப் பயன்படுத்துகிறோம். ஒரு வாகனத்தை உற்பத்தி செய்வதற்கு அறிவு பயன்படுத்தப்படுகிறது.

அறிவுச் சமூகம் இன்று என்ன செய்கிறதென்றால் சர்வதேச அறிவை உள்வாங்கும் சமூகமாக மாற்றமடைகிறது. அதாவது, உலகளாவிய அறிவை உள்வாங்குதல், ஊடகவியலாளர்களாகிய நீங்கள் உலகளாவிய அறிவை உள்வாங்குங்கள். உங்களால் சில அறிவை நீங்கள் மட்டுமே வைத்திராமல் நாடு முழுவதும் சமூகத்திற்கு பரப்புதல் வேண்டும்.

உலகளாவிய அறிவை உள்வாங்கி, பின்னர் அதனை சமூக மேம்பாட்டுக்காகவும் நாடு முழுவதும் யாரால் பரப்ப முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தபாலதிபரால் செய்ய முடியாது, ஸ்டேசன் மாஸ்டரால் செய்ய முடியாது? ஆனால் உள்வாங்கிய அறிவை பரப்புவதற்கு ஊடகவியலாளர்களால் முடியும். இந்த சமூகத்தை அறிவுச் சமூகமாக மாற்றும் கடமை ஊடகவியலாளர்களாகிய உங்களது கடமை. எமது தமிழ்ச் சமூகத்தை ஒரு அறிவுச் சமூகமாக மாற்றக்கூடிய ஆற்றல் உங்களிடம் இருக்கிறது.



**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெகுஜன ஊடகங்கள் தமது பங்குகளை அறிந்து செயற்பட்டால் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்காற்ற முடியும்

எனது கருத்துரையை நான் ஆங்கிலத்தில் வழங்குகிறேன். ஆங்கிலத்தில் நான் மேதை என்பதற்காக அல்ல. உங்களுடன் தொடர்பாடலை நடத்த தமிழ் தெரியாததையிட்டு நான் வெட்கப்படுகிறேன். எனினும், இவ்வளவு காலத்தின் பின்னர் தமிழ் மொழியை அறிந்து கொள்வது கடினமானதாக இருக்கும்.

இந்தக் காலைப்பொழுதில் இவ்வாறான அரிய சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கிய வெகுஜன ஊடக மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு அதிகமான சகோதர மொழி ஊடகவியலாளர்கள் மத்தியில் இன்றுதான் நான் முதன் முதலில் கருத்தரங்கொன்றை நடத்துகின்றேன். எனக்கு வழங்கப்பட்ட தலைப்பு தேசிய அபிவிருத்தியில் வெகுஜன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடலின் பங்கு என்பதாகும். ஆனால் வெகுஜன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடலின் வரலாற்று ரீதியான வகிபங்கு என எனது தலைப்பை நான் சற்று மாற்றியுள்ளேன். வெகுஜன ஊடகங்கள் 400-500 வருடகால வரலாற்றைக் கொண்டிருக்கின்ற போதும் அது சரியான முறையில் இதுவரை வரையறுக்கப்படவில்லை. வெகுஜன ஊடகங்களின் பங்கு அல்லது அவற்றின் கடப்பாடு குறித்து சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் பற்றி எவருக்கும் தெரியாது. இதற்கு சில உதாரணங்களைத் தருகின்றேன். மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளில் தற்பொழுது இடம்பெற்றுவரும் சில சம்பவங்கள் பற்றி எமக்குத் தெரியும். இந்த சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்ற உண்மைகள் பற்றி எமக்கு என்ன தெரியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேய ஊடகங்கள் வழங்கும் தகவல்கள் மட்டுமே எமக்குத் தெரியும். ஊடகங்கள் என நான் குறிப்பிட்டது மேற்கு உலக நாடுகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற தன்னிச்சையான ஊடகங்களையே.

பி.பி.சி., சி.என்.என்., ஏபி, ஏவ்பி, போன்ற ஊடகங்களின் ஊடாகவே நாம் உலகத்தைக் காண்கின்றோம். எகிப்தில் 30 வருடங்களாக ஆட்சி நடத்திய ஹொஸ்னி முபாரக் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் ஒரு சர்வாதிகாரி. இவருடைய ஆட்சி கலைக்கப்பட்டது. அவருடைய அரசாங்கத்திற்கு எதிராக பல இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அனைத்தும் போதும் இனிமேல் முபாரக் வீடு செல்ல வேண்டும் என மக்கள் தீர்மானித்தனர். எகிப்திய மக்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து முபாரக் பதவியிலிருந்து வெளியேறினார். இவ்வாறானதொரு அர்த்தமே ஊடகங்கள் மூலம் எமக்கு வழங்கப்பட்டது. எனது நிலைப்பாடு என்னவென்றால் ஊடகங்கள் மூலம் எமக்குக் காண்பிக்கப்பட்ட அல்லது தோற்றுவிக்கப்பட்ட பிம்மம். உண்மை நிலைப்பாட்டின் சிறு பகுதி மாத்திரமே எமக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது. உண்மைக் கதையில் 10 முதல் 15 வீதம் வரையான பகுதி மாத்திரமே ஊடகங்கள் மூலம் எமக்குச் செல்லப்பட்டுள்ளன. எமக்குச் சொல்லப்படாத பல கதைகளும் உண்டு.

ஊடகங்களால் சர்வாதிகாரி என முத்திரை குத்தப்பட்ட ஹொஸ்னி முபாரக் சில வருடங்களுக்கு முன்னர் மேலைத்தேய ஊடகங்களாலும், சர்வதேசத் தலைவர்களாலும் சில வருடங்களுக்கு முன்னர் ஜனநாயக வாதியெனப் பிரகடனப்படுத்தப்பட்டவர். 1981 ஒக்டோபர் மாதம் எகிப்திய ஜனாதிபதியாகவிருந்த அன்வர் எல்சடாட் படுகொலைசெய்யப்பட்ட பின்னர் 1982ஆம் ஆண்டு ஹொஸ்னி முபாரக் பதவிக்கு வந்தார். 1982ஆம் ஆண்டு எகிப்தின் கெய்ரோவுக்கு விஜயம் செய்திருந்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஹொஸ்னி முபாரக்கைப் பாராட்டியதுடன், முபாரக்கின் ஜனநாயகத்தை விரும்புவதாகவும் அவர் கூறியிருந்தார். இவ்வாறு பாராட்டப்பட்ட முபாரக் தற்பொழுது சர்வாதிகாரியாக முத்திரை குத்தப்பட்டுள்ளார். இரண்டு வருடத்திற்கு முன்னர்கூட சர்வதேச நாணய நிதியம் எகிப்தை பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுதாரணமான நாடு என அறிவித்திருந்தது. மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளில் இடம்பெறும் சம்பவங்களின் உண்மைச் செய்திகள் எமக்குச் சொல்லப்படுவதில்லை என்பதே எனது நிலைப்பாடு.

எகிப்திய மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடுவதற்குப் பல்வேறு காரணங்கள் பின்னணியில் இருந்துள்ளன. மேலைத்தேய ஊடகங்களின்படி அரசியல் சுதந்திரம், உணவு, வேலைவாய்ப்பு, சிறந்த வாழ்க்கைத்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றைக் கோரியே எகிப்திய மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடியதாகக் கூறப்பட்டது. ஊடகங்களின் பங்கு குறித்து சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் எதுவும் இல்லையென்பதாலேயே இவ்வாறான நிலை காணப்படுகிறது என நான் நினைக்கின்றேன். ஆனால் எமது நாடு இந்த விடயத்தில் பாதுகாப்பாக உள்ளது. இந்தியாவும் பாதுகாப்பாகவே உள்ளது. உதாரணமாக பாகிஸ்தானில் சில வாரங்களுக்கு முன்னர் லாஹூர் நகரில் சீ.ஐ.ஏ. முகவர் ஒருவர் தனது துப்பாக்கியில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இச்சம்பவம் பற்றி சமூக ஊடகங்கள் எனத் தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் ஊடகங்கள் ஏதாவது செய்திகளை வெளியிட்டனவா? இல்லை, அவை எந்தச் செய்தியையும் வெளியிடவில்லை. அமெரிக்காவின் மெடிசின் நகரில் அப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் அப்பிராந்தியத்தின் ஊழியர் சட்டத்துக்கு முரணானது என்பதால் அதுபற்றிய செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் வெகுஜன தொடர்பாடல் ஊடகங்கள் பற்றி ஒரு பொதுவான இணக்கப்பாடொன்றுக்கு நாம் வரவேண்டியுள்ளது. நீண்ட வரலாறுகொண்ட ஊடகவியல் மற்றும் வெகுஜனத் தொடர்பாடல் பற்றியும் அதன் பங்களிப்புப் பற்றியும் வரைவிலக்கணமொன்றை உருவாக்குவதற்கு நூற்றுக்கணக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறானதொரு முயற்சியில் மூன்று ஊடக விற்பன்னர்களான வில்பேர்ஸ் ஹார்ப், சீ பேர்ட் மற்றும் பீற்றர்சன் ஆகியோர் ஈடுபட்டனர். இவர்கள் மூவரும் இணைந்து பத்திரிகைகளின் நான்கு தத்துவங்கள் எனும் பெயரிலான புத்தகமொன்றை 1956ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தனர். இப்புத்தகத்தில் ஊடகங்களின் பங்கு தொடர்பான பட்டியலொன்றையும் அவர்கள் உள்ளடக்கியிருந்தனர். குறிப்பாக ஊடகங்களின் முக்கியமான 6 பங்களிப்புக்களை அல்லது செயற்பாடுகளை இம்மூன்று விற்பன்னர்களும் அடையாளம் கண்டிருந்தனர்.

இதில் முதலாவதாக அரசியல் முறைமையை தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்வதை ஊடகங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒரு நாட்டில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள பொருளாதார முறைமை சீரான முறையில் முன்னெடுத்துச் செல்வதை ஊடகங்கள் உறுதிப்படுத்த வேண்டும். நாம் சில குறிப்பிட்ட பொருளாதார, அரசியல், சமூக கட்டமைப்புக்களின் கீழான ஒரு உலகத்திலேயே வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் ஊடகங்கள் அரசியல் முறையை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடுடையன. ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் தனிப்பிட்ட கருத்து என்னவெனில் உலகத்தின் எந்தவொரு பகுதியிலும் ஜனநாயகம் என்பது இல்லை. ஆனால் நாம் அதன் ஒரு சில பகுதிகளைப் பயன்படுத்துகிறோம். எனவே, இவற்றின் ஊடாக வெகுஜன ஊடகங்கள் அரசியல் முறைமை சுமுகமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும். ஜனநாயகம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படாவிட்டால் அவர்கள் தமக்கான தலைவர்களை, ஜனாதிபதியை, பாராளுமன்ற உறுப்பினர்களை, பிரதமரைத் தெரிவுசெய்ய முடியாது போய்விடும்.

இரண்டாவதாக ஊடகங்கள் மக்களுக்குத் தகவல்களை வழங்கவேண்டும் என அவர்கள் குறிப்பிடுகின்றனர். மக்கள் தம்மைப் பாதுகாக்கக் கூடிய வகையிலான தீர்மானங்களை எடுக்கக் கூடிய வகையில் அவர்களுக்குத் தகவல்கள் வழங்கப்படவேண்டும். தகவல்களை வழங்குவது ஊடகங்களின் முக்கியமானதொரு செயற்பாடாகக் கருதப்படுகிறது. நாட்டில் என்ன நடைபெறுகிறது என்பது பற்றி மக்களுக்கு ஊடகங்கள் தகவல்களை வழங்கவேண்டும். நான் ஏற்கனவே கூறிய மத்திய கிழக்கு விடயத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டால் உண்மையான அனைத்துத் தகவல்களையும் ஊடகங்கள் எமக்கு வழங்கியுள்ளனவா? எமது நாட்டையே எடுத்துக்கொண்டால் 3 மொழிகளிலும் பல தினப்பத்திரிகைகள், 3 டசினுக்கும் அதிகமான ரேடியோ அலைவரிசைகள், ஒரு டசினுக்கும் அதிகமான தொலைக்காட்சி உள்ளன. எதிர்வரும் 50 வருடங்களில் எண்ணெய் வளம் இல்லாமல் போயிடும் என்பது எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? இது பற்றி ஊடகங்கள் தவல்களை வெளியிட்டுள்ளனவா? அதேபோல காலநிலை மாற்றம் மனிதனுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பது பற்றி எத்தனை இளைஞர், யுவதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சவாலை சரியான முறையில் எதிர்கொள்ளாவிட்டால் 200, 300 வருடங்களில் மனிதன் முற்றாக அழிக்கப்பட்டுவிடுவான். இது பற்றி எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? இக்கேள்விகள் மூலம் தீர்வொன்றை நான் கூறவரவில்லை, இதற்கான விடைகளைக் கண்டறியும் பொறுப்பை உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

எனவே, ஊடகங்கள் சரியான தகவல்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற விடயம் ஆண்டாண்டு காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆட்சி, அரசியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் மக்களுக்குச் சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு சரியான தகவல்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றதோ அதற்கேற்ற வகையில் மக்கள் சரியான தீர்மானத்திற்குச் செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது புகழ்பெற்ற தலைவர்களான டொக்டர் என்.எம்.பெரேரா, கொலின் ஆர்.டி.சில்வா ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர். அப்போ யார் தெரிவுசெய்யப்பட்டனர்? இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், அவர்கள் பற்றி மக்களுக்குச் சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை. இதனால் மக்கள் தமது அறிவுக்கு எட்டிய வகையில் பிழையான தீர்மானமொன்றுக்குச் சென்றனர்.

மூன்றாவது தனிநபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் காப்பாளர் என்ற பங்கும் ஊடகங்களுக்கு உண்டு. மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் விடயத்தில் ஊடகங்கள் சரியான முறையில் செயற்படவேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக ஊடகங்கள் பொது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதைவிடுத்து தமது உரிமையாளர்கள் அல்லது தமது தலைவர்களை முன்னிலைப்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றன. பக்கச்சார்பற்ற முறையில், ஜனநாயக ரீதியிலான, சுதந்திரமான, துறைசார் வல்லுனர்களைக் கொண்ட ஊடகங்கள் எனக் கூறப்படும் மேலைத்தேய ஊடகங்கள் இவ்விடயத்தில் எவ்வாறு செயற்படுகின்றன? அவற்றின் செயற்பாடுகளின் காரணமாகவே மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளில் உண்மையில் என்ன நடைபெறுகிறது என்பதை அறிய முடியாதுள்ளது. எகிபதில் ஏற்பட்ட குழப்பநிலையில் என்ன நடந்தது? ஊடகங்கள் வேறு விடயத்தில் அக்கறை காட்டுகின்றன. ஆனால் 300, 400 வருடங்கள் வரலாற்றைக் கொண்ட ஊடகத்துறை மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் பார்வையாளராகச் செயற்படவேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

அடுத்ததாக பொருளாதார மேம்பாட்டுக்கான உதவி. வில்பேர்ஸ் உள்ளிட்ட மூவர் இங்கு கூறவருவது என்னவெனில் வெகுஜன ஊடகங்கள் கொள்வனவாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் இடையிலான ஒரு தளமாக அமையவேண்டும் எனக் கூறுகின்றனர். துரதிஸ்டவசமாகவோ அல்லது அதிஸ்டவசமாகவே ஊடகங்கள் இப்பணியை மாத்திரம் செவ்வனே செய்து வருகின்றன. உதாரணமாக கடந்த 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் அனைத்து மொழிப் பத்திரிகைகளைப் பார்த்தீர்களாயின் அனைத்துப் பத்திரிகைகளும் பச்சை நிறமாகக் காணப்பட்டன. யார் இந்த மாற்றத்தைச் செய்தது. வேறு யாருமல்ல டுபாயிலிருந்து இலங்கை வந்த கையடக்கத்தொலைபேசி நிறுவனமொன்றே விளம்பரத்திற்காக ஊடகங்களில் இவ்வாறானதொரு மாற்றத்தை செய்திருந்தது. இதிலிருந்து விளங்கிக்கொள்வது என்னவெனில் வாடிக்கையாளர்களையும், விற்பனையாளர்களையும் இணைக்கும் பணியை ஊடகங்கள் சரியான முறையில் மேற்கொண்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களின் அடுத்த பணி மக்களை மகிழ்வூட்டுவது அல்லது அவர்களுக்குப் பொழுதுபோக்கை ஏற்படுத்துவது. இந்தப் பணியையும் ஊடகங்கள் சரியான முறையில் மேற்கொள்கின்றன என்றே கூறலாம். உதாரணமாக இலங்கையிலுள்ள 35ற்கும் மேற்பட்ட எவ். எம் அலைவரிசைகளை எடுத்துக்கொண்டால் எம்முடன் தொடர்ந்தும் இணைந்திருங்கள், உங்களை நாம் மகிழ்ச்சிப்படுத்துவோம் என்ற அறிவிப்பை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கும். ஊடகங்களின் முக்கியமான பங்கு மக்களை மகிழச்சிப்படுத்துவது மாத்திரமே என சில புத்திஜீவிகள் கூறுகின்றனர். ஊடகங்கள் தமக்கென தனியான நிதி முறைமையொன்றை உருவாக்கவேண்டும். இதன்மூலம் எந்தவொரு அரசியல் கட்சியிலோ அல்லது வியாபார நிறுவனத்திலோ ஊடகங்கள் தங்கியிருக்கவேண்டிய தேவை இல்லை.

இவ்வாறான செயற்பாடுகளிலேயே ஊடகங்கள் ஈடுபடவேண்டும் என பத்திரிகைகளின் நான்கு தத்துவங்கள் எனும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், நாம் முன்னர் கூறியதைப்போன்று ஊடகங்களின் வகிபங்கு தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடக நியமங்கள் எதுவும் இல்லை. ஆனால் ஒரு பகுதி அறிவாளிகள் மக்களை மகிழ்விப்பதே ஊடகங்களின் முக்கியமான பணி எனக் கூறுகின்றனர். மிகவும் பிரபலான பிரமுகர் எமிலியோ அஸ்கரகா இதுபற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தில் இவர் மிகவும் பிரபலமானவர். இவர் மெக்சிக்கோ தொலைக்காட்சியான ரெலிவிசாவின் ஸ்தாபகர். இவர் ஒரு கோடீஸ்வரர். உங்கள் அனைவருக்கும் தெரியும், தற்கால ஊடகங்கள் பாரிய வருமானம் தரும் ஒரு முக்கிய வளமாக அமைந்துள்ளன. அதனால்தான் இன்று உலகளாவிய ரீதியிலுள்ள ஊடகங்களில் 70 சதவீதமானவை பல்தேசியக் கொம்பனிகளின் கையில் உள்ளன. ஊடகங்கள் எனும் போது பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள், புத்தக வெளீயீடு உட்பட அனைத்தையும் உள்ளடக்கும்.

தற்போதைய உலகில் 70 வீதமானவை 7 கம்பனிகளிடமே உள்ளன. அவ்வாறாயின் அந்த 7 ஊடகங்களும் தான் எவை? ஏ.ஓ.எல். டைம்ஸ் வோர்னர். மிகவும் பாரிய ஊடக நிறுவனம் இது. ஏ.ஓ.எல். அமெரிக்கன் ஒன்லைன். இது பாரிய இணையத்தள சேவை வழங்குனர்கள். இதனுடன் டைம்ஸ் வோர்னர் நிறுவனமும் இணைந்து செயற்படுகிறது. இதில் சி.என். என்., டைம்ஸ் சஞ்சிகை, வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிறுவனத்தைச் சார்ந்தவை. இவற்றைவிட டிஸ்னி கோப்ரேஷன், சோனி கோப்ரேஷன், நியூஸ் கோப்ரேஷன், பேர்டலிப்மான், விமென்டீ யூனிவேர்சல் ஆகிய கம்பனிகளே அந்த ஏழு பல்தேசியக் கம்பனிகள்.

எமிலியோ, அஸ்கரகா, மெக்சிகோ, ரெலிவீசா தொலைக்காட்சி நிறுவனத்தின் நிறுவுனர். இவர் கூறுவது என்னவெனில், மெக்சிக்கோவிலுள்ள மக்கள் மிக நாகரீகம் கூடியவர்கள். அவர்கள் வாழ்க்கையில் வெறுத்துப்போன நிலையில் கவலையில் உள்ளனர். அவர்களை அதிலிருந்து மீட்டு சாதாரண நிலைக்குக் கொண்டுவர வேண்டிய பொறுப்பு தொலைக்காட்சிக்கு உண்டெனக் கூறியிருந்தார். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதல்ல, ஆனால் ஒரு மாற்றமொன்றை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். அவர்கள் தமது கவலைகளிலிருந்து மீண்டெளக்கூடிய வகையில் புதிய சிந்தனைகளை வழங்குவதுடன், கவலைகளிலிருந்து மீளக்கூடிய வகையில் பொழுதுபோக்கு அம்சங்களை வழங்கவேண்டும் என அவர் கூறியிருந்தார். ஆம் எமிலியோ கூறியது மிகச் சரியானது, எனது நிலைப்பாடும் அதுவே.

கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் 1950ஆம் ஆண்டு காலத்தில் உலகநாடுகளை உள்ளடக்கி ஊடகங்களின் பங்கு தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெற்றிருந்தன. ஆனால் இது துரதிஷ்டவசமாக செயலிழந்துவிட்டதுடன் இது பாரியதொரு பின்னடைவு. இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஊடகங்களின் பங்களிப்புத் தொடர்பாக வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறான கருத்துக்கள் இணைக்கப்பட்டன. இதன் ஒரு அங்கமாகவே யுனெஸ்கோ முகவர் நிலையம் உருவாக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் விசேடமானதொரு முகவர் அமைப்பு இது.

வெகுஜன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் என்பன யுனெஸ்கோவின் கொள்கைத் திட்டத்தின் கீழ் வருகின்றன. ஊடகங்கள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் ஒரு அம்சமாக யுனெஸ்கோ 14 பேர்கொண்ட ஆணைக்குழுவொன்றை 1972ஆம் ஆண்டு அமைத்தது. ஊடகங்களின் பங்களிப்புக்கள் பற்றி ஆராய்வதற்கும், ஊடகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. சைம் மக்கீல்ட் என்பவர் தலைமையிலேயே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இவர் அயர்லாந்தைச் சேர்ந்தவர். இந்த ஆணைக்குழு பல நாடுகளில் விசாரணைகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டு ஊடகங்களின் செயற்பாடுகள் அல்லது பங்களிப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் சில முன்மொழிவுகளை முன்வைத்தது. இந்த முன்மொழிவுகள் யாவும் தொகுக்கப்பட்டு பாரியதொரு புத்தகம் 1980ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இப்புத்தகம் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இந்த ஆணைக்குழுவிற்கு அமைய ஊடகங்களின் பங்களிப்புத் தொடர்பில் 8 முக்கிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் முதலாவது தகவல் வழங்குதல் ஆகும். மக்கள் தமது நகரத்தில், கிராமத்தில், நாட்டில், உலகத்தில் என்ன நடைபெறுகிறது என்பது பற்றி சரியான தகவல்களை அறிந்துகொள்ள வேண்டும். இதில் வேறெந்த மேலதிக விடயங்களையும் உள்ளடக்க முடியாது. தகவல் எனக் கூறும்போது அவை சரியானதாக துல்லியமானதாக, புனையப்படாததாக, பக்கச்சார்பற்றதாக அமையவேண்டும். இதன் அடிப்படையில் ஒரு நாட்டில் ஜனநாயகத்தை சுமுகமாக நிலைநாட்டுவதற்கு தகவல்கள் வழங்கப்படுவது அவசியமானது.

1950ஆம் ஆண்டுகளில் மேலைத்தேய நாடுகள் மத்தியில் ஒரு தொலைக்காட்சி நாடகமொன்று மிகப் பிரபல்யமாகியிருந்தது. அதன் பெயர் ''ஜனநாயகத்துக்கான போராட்டம்" ஆகும். கனடாவைச் சேர்ந்த ரிஸ்ரி வில்சன் என்பவர் இதனை இயக்கியிருந்தார். இந்த நாடகம் மக்கள் மத்தியில் மிகவும் பிரமல்யமடைந்திருந்தது. பல ஊடகவியலாளர்கள் அவரை நேர்காணல் கண்டனர். அவரை நேர்கண்ட ஒரு ஊடகவியலாளர் ஜனநாயகம் என்றால் என்ன? எனக் கேள்வியெழுப்பியிருந்தார். அதற்கு அவர் தகவல் என ஒரு வார்த்தையில் பதில் வழங்கினார். மக்கள் சரியான முறையில் தகவல்களைப் பெற்றுக்கொண்டாலே ஜனநாயகம் நிலைக்க முடியும். தகவல்கள் சரியான முடிவுகளை எடுப்பதற்கு வழிசமைக்கும்.

## சமூகமயப்படுத்தல்

ஒரு சமூகம் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினையை அவர்களுக்குப் புரிய வைப்பதற்கான பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே சமூகமயப்படுத்தல் என்பதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. உலகத்தில் எந்தவொரு சமூகமும் சில விடயங்களால் கட்டுப்படுத்த அல்லது தாக்கத்துக்குள்ளாகின்றது. இதனால் இவ்விடயத்தில் அச்சமூகத்தால் சரியான தீர்மானம் ஒன்றுக்கு வரமுடியாமல் போகிறது. எனவே இது விடயத்தில் வெகுஜன ஊடகங்கள் மக்களுக்கு சரியான அறிவை ஏற்படுத்தி சமூகத்தை பிரச்சினைகளிலிருந்து மீட்பதற்கு உதவவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊக்குவித்தல்

ஒரு சமூகம் முன்னோக்கிச் செல்லவேண்டுமாயின் அச்சமூகம் ஊக்கவிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஊக்குவிக்கப்பட்டாலே ஒரு நாடு அபிவிருத்தி அடையமுடியும். பொதுவாக மக்கள் தமக்கு முன்னிலையில் இடம்பெறும் நாளாந்த செயற்பாடுகள் பற்றித் தெரியாது. எனவே, அவை பற்றி மக்களுக்கு அறிவூட்டவேண்டும், ஊக்குவிக்கப்படவேண்டும். உதாரணமாக 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் எமது நாடு மோசமாகப்பாதிக்கப்பட்ட நிலையில் அனர்த்தத்திலிருந்து மக்கள் விடுபட்டு மீண்டும் சாதாரண வாழ்க்கையில் இணைவதற்கு ஊடகங்கள் சிறப்பான முறையில் மக்களை ஊக்குவித்திருந்தன. அதுவே இங்கு குறிப்பிடப்படுகிறது. இரண்டாவது உலகமகா யுத்தத்தின் பின்னர் ஜப்பான் தனது நாட்டில் ஏற்பட்ட அணுகுண்டுத் தாக்குதலிலிருந்து அந்நாடு மீண்டெழுவதற்கு ஊடகங்கள் பெரும் பங்காற்றியிருந்தன. குறுகிய காலத்தில் அந்நாடு அபிவிருத்தியை எட்டியதுடன், உலகத்தின் இரண்டாவது பொருளாதார உறுதிமிக்க நாடு என்ற இலக்கையும் எட்டியது. ஜப்பானியர்கள் அந்நாட்டு அரசியல் தலைவர்கள் மற்றும் ஊடகங்களால் ஊக்குவிக்கப்பட்டதினாலேயே அந்நாடு பாரியதொரு முன்னனேற்றத்தை அடையமுடிந்தது.

## விவாதங்களும் கலந்துரையாடல்களும்

வெகுஜன ஊடகங்கள் ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து விவாதங்களையும் கலந்துரையாடல்களையும் நடத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டவை. எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கின்றோம். விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமே சில விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படும். எனவே இவற்றின் மூலமே மக்கள் சரியான தீர்மானமொன்றுக்கு வரமுடியும்.

## அறிவூட்டல்

புதிய அபிவிருத்தி தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டப்படவேண்டும். அறிவுத்திறன் மிகவும் வேகமாக வளர்ந்துவரும் உலகிலேயே நாம் தற்பொழுது வாழ்ந்து வருகின்றோம். உதாரணமாக யுனெஸ்கோ 1970களில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி நிலவுடமை முறைமை இருந்த காலத்தில் அறிவுத்திறன் மிகவும் குறைவாக இருந்துள்ளது. எனினும், 20ஆம் நூற்றாண்டில் அறிவுத்திறன் அதிகரிக்கும் வீதம் மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக அறிவுத்திறன் அதிகரிக்கும் வீதம் இரட்டிப்படைந்துள்ளது. 2005ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் படி ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் மக்களின் அறிவுத்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டிப்படைந்து செல்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. நாம் விவசாய சமூகத்திலிருந்து, அறிவுத்திறன் கூடிய சமூகத்திற்கு மாறியுள்ளோம். எனவே புதிய முயற்சிகள், நவீன தொழில்நுட்பம் பற்றி ஊடகங்கள் மக்களுக்கு அறிவூட்டவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளன.

### கலாசாரப் பரப்பல்

இதுவும் வெகுஜன ஊடகங்களின் மற்றுமொரு முக்கியமான கடமை. கலாசாரம் பற்றி விழிப்புணர்வு அல்லது கலாசாரத்தை மக்கள் மத்தியில் பரப்புவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும், பாரம்பரிய வளர்ச்சிக்கும் பெரும் உறுதுணையாக அமையமுடியும். ஒருவருடைய மாறுப்பட்ட சிந்தனையைத் தூண்டி அதனை ஏனையவர்கள் மத்தியில் பரப்ப ஊடகங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனால் தற்போதைய ஊடகங்கள் இதனைச் சரியாக நிறைவேற்றுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இதற்கான பதிலை கண்டறியும் பொறுப்பை நான் உங்களிடமே கையளிக்கின்றேன்.

### பொழுதுபோக்கு

ஊடகங்கள் மக்களுக்கான பொழுதுபோக்கு சாதனமாக அமையவேண்டும் என்பதையே சீ மக்கில்ட் ஆணைக்குழு கூறுகிறது. சஞ்சிகைகள், குறியீடுகள், நாடகங்கள், நாட்டியம், ஒலி, ஓவியம், நகைச்சுவை, விளையாட்டு போன்றவற்றால் மக்களை மகிழ்வித்தல் அல்லது பொழுதைப் போக்குதல் என்பதன் மூலம் இதனை வரைவிலக்கணப்படுத்துகிறார்கள். எனினும், தற்போதைய ஊடக நடைமுறையை நோக்கினால் பாடல்கள் மாத்திரமே மக்களை மகிழ்விப்பதாக ஊடகங்கள் கருதுகின்றன. இலக்கியம், நாட்டியம், சித்திரம், நகைச்சுவை போன்றவற்றுக்கு ஊடகங்களில் சரியான இடம் வழங்கப்படுவதில்லை. ஆனால் விளையாட்டுக்குப் போதியளவு இடம் வழங்கப்படுகிறது. விளையாட்டுத் துறைக்குப் பின்னால் பல விளம்பர நிறுவனங்கள் நிற்பதால் அதற்கு முக்கியமளிக்கப்படுகிறது. இதனைவிட ஊடகங்களால் மக்களுக்கு எந்தவிதமான பொழுதுபோக்கு அம்சங்களும் வழங்கப்படுவதில்லை.

### ஒருங்கிணைத்தல்

மக்கீல்ட் ஆணைக்குழு இறுதியாக அடையாளப்படுத்தியிருப்பது ஊடகங்களின் ஒருங்கிணைப்புப் பணியையே. மாறுப்பட்ட இனங்கள், மாறுப்பட்ட சமூகங்களுக்கிடையில் சமத்துவத்தைப் பேணுவது என அர்த்தப்படுகிறது. சமூக, கலாசார, இன ரீதியான பிணைப்புக்களையுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உலகத்திலேயே நாம் தற்பொழுது வாழ்ந்து வருகின்றோம். இதனை யாராலும் மறுக்க முடியாது. தற்பொழுது உலகில் ஏறக்குறைய 200 நாடுகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையை வைத்து நோக்கினால் 192 நாடுகள் உள்ளன. இந்த நாடுகள் அனைத்தையும் எடுத்து நோக்கினால், கலாசார வேறுபாடுகள் எந்தவொரு நாட்டிலும் இல்லாமல் இல்லை. ஆனால், மாலைதீவு போன்ற ஒரு சில நாடுகளில் மாத்திரம் ஒரே மத வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. நைஜீரியா போன்ற நாடுகளை எடுத்துப் பார்த்தால் அங்கு 450 குழுக்களும், எத்தியோப்பியாவில் 90 குழுக்களும், இந்தியாவில் 100ற்கும் அதிகமான சமூகங்களும், இலங்கையில் 4 சமூகங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் சமத்துவத்தைப் பேணி, சமூகங்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்படவைப்பதே ஊடகங்களின் பங்கு.

ஒரு சமூகம் பற்றி மற்றைய சமூகங்களுக்கு ஊடகங்கள் அறிவூட்டவேண்டும். ஆனால் இவ்விடயத்தில் ஊடகங்கள் சரியாக நடந்துகொள்கின்றனவா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளன. இலங்கை, இந்திய ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள உல்லாச விடுதியொன்றில் கைச்சாத்திடப்பட்டது. இதன் பின்னர் ஊடகவியலாளர் மாநாடொன்று நடைபெற்றது. இதில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கலந்துகொண்டார். நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு யார் பொறுப்புக் கூறுவது என வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் ஜே.ஆரிடம் கேள்வியெழுப்பினார். நீங்களும், நானும் தான் என அவர் பதில் வழங்கியிருந்தார். இதில் நீங்கள் என அவர் கூறியது ஊடகங்களை.

இதுவே ஊடகங்களின் பங்குகளாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதேநேரம் இன்னுமொரு சாரார் ஊடகங்கள் வெறுமனே பொழுதுபோக்கும் சாதனங்கள் எனக் கருதுகின்றனர். அத்துடன், ஊடகங்கள் விற்பனையாளர்களையும், கொள்வனவாளர்களையும் சந்திக்கவைக்கும் ஒரு திடலாகச் செயற்படுகின்றன என்று ஒரு சாரார் கூறுகின்றனர். அமெரிக்காவில் மிகவும் பிரபலமான புத்திஜீவி ஒருவர் ஒருமுறை இந்தியா சென்றபோது தொலைக்காட்சியின் பங்கு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்த அவர் தொலைக்காட்சிகள் தமது இரசிகர்களை விளம்பரதாரர்களிடம் விற்பனை செய்கிறார்கள் எனப் பதிலளித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பொதுவாக வெகுஜன ஊடகங்கள் ஜனநாயகத்தை, நல்லாட்சியை, தனிநபர் உரிமைகளை நிலைத்திருக்கச் செய்யவேண்டும். வெகுஜன ஊடகங்கள் இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றன. அமெரிக்காவும் நட்பு நாடுகளும் ஈராக்கின் மீது படையெடுக்கத் தீர்மானித்தபோது அமெரிக்க ஊடகங்கள் அமெரிக்காவுக்குச் சாதகமாக நடந்துகொண்டன.

இவ்வாறு அல்லாமல் வெகுஜன ஊடகங்கள் தமது பங்குகளை அறிந்து செயற்பட்டால் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்காற்ற முடியும்.

நன்றி



**மொஹான் சமரநாயக்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகங்கள் என்றால் என்ன?

பொதுவாக ஊடகம் என்பது தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக் கூடிய பல்வேறு வழிகளை குறிக்கின்றது. உதாரணமாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையத்தளம் என்பன அவற்றில் சில. கணினித் துறையை எடுத்துக்கொண்டால் பல்வேறு விதமான தரவுக் களஞ்சியங்களைக் குறிக்கின்றது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக சமூகத்தினர் அதிக பலம் பொருந்தியவர்களாகக் காணப்படுவதுடன், ஏனைய தரப்பினர்களைவிடவும் அவர்களுக்கு சமூகத்தில் தாக்கம் செலுத்துவதற்கான அதிக வாய்ப்புக் காணப்படுகிறது.

'Journal For National' ஆசிரியர் அந்த செல்வாக்கினை பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

''வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை ஜனாதிபதி நிக்ஷனை அதிகாரத்திலிருந்து கீழே இறக்கியது. 1971ஆம் ஆண்டிலே பங்களாதேஷ் நாட்டின் விடுதலைக்காக மேற்கு பாகிஸ்தானிற்கு எதிராக ஊடகங்களின் உதவியினைப் பெற்றுக்கொள்ள இந்திரா காந்தியால் முடிந்தது. வர்ணத் தொலைக்காட்சிப் படங்கள் மூலம் வியட்னாம் யுத்தத்தின் கொடூரத் தன்மையினை எடுத்தக்காட்டுவதற்கும், அதனை முடிவுறுத்துவதற்கும் பங்களிப்புச் செய்வதற்கும் தொலைக்காட்சிக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மேற்கு ஜேர்மனியில் தொலைக்காட்சி நிகழ்ச்சி திட்டங்கள் கிழக்கு ஐரோப்பாவின் மக்கள் எழுச்சிக்கும் குளிர்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் காரணமாக அமைந்தது''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சனத்தொகையானது பல்லினத் தன்மையைக் கொண்டுள்ளது. இதில் சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலேயர் ஆகிய சமூகத்தினர் அங்கம் வகிக்கின்றனர். 2007ஆம் ஆண்டு தகவலின் படி சிங்களவர்கள் 74 வீதமும், தமிழர் 18 வீதமும், முஸ்லிம்கள் 7 வீதமும், ஏனைய சமூகத்தினர் 1 வீதமுமாகக் காணப்படுகின்றனர்.

இந்த ஒவ்வொரு இனத்தவருக்கும் தனிச்சிறப்பு மிக்க சமய, கலாசார மற்றும் சமூக முறைமைகள், பெறுமதிகள் மற்றும் அளவுகள் என்பவற்றுடன் ஆளடையாளங்கள் என்பவும் வேறுபடுகின்றன. அவற்றினை மேம்படுத்தல் அவற்றினுடாக ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் பொதுவாக செயற்படக்கூடிய பொதுத் தன்மைகளையும் காணக்கூடியதாகவுள்ளது. சமூகத்தில் பிரஜை ஒருவராக கலாசாரங்கள் பற்றிய அறிவு, சமூகத்தின் பிரஜை ஒருவராக அவரது பொறுப்பு, அஹிம்சை வழியிலான பாதைகள் என்வற்றினூடாக மோதல் தவிர்ப்பு போன்ற திறமைகளை விருத்தி செய்வது தொடர்பில் ஊடகங்களுக்குப் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பின் ஊடாக முக்கியமாக இலங்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்தி பல்லின சமூகத்தில் ஊடகங்களுக்கான பொறுப்பினை பற்றி அவதானம் செலுத்துவது பயன்தருவதாக அமையும்.

## தேசிய ஒருமைப்பாட்டினை விருத்தி செய்தல்

கல்வியின் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்பப் புரட்சி என்பவற்றினால் சமூகத்தை விழிப்புணர்வூட்டுவதற்கும், அறிவூட்டுவதற்குமான பாரிய சாத்தியவளம் ஊடகங்களுக்கு காணப்படுகிறன. தனிப்பட்ட, சமூக ரீதியான மற்றும் தொழில்சார்ந்த வாழ்வின் அனைத்துத் துறையிலும் ஊடகத்தின் தாக்கம் செலுத்தப்பட்டுள்ளது. பாரிய ஏற்றத்தாழ்வுமிக்க, பல்வகை சுவையுடைய வாசகர்களினூடாக இந்தப் பொறுப்புக்கள் ஊடகங்களினால் மேற்கொள்ளவேண்டியுள்ளன. இலங்கை தொடர்பாக ஊடகங்களுக்குப் பாரிய பணியாற்றக்கூடியதாக உள்ளது. அதற்கான துறைகளாக தேசிய ஒற்றுமையை விருத்திசெய்யக் கூடிய துறைகளை நாம் இனங்காணல் வேண்டும். அத்துறைகளாவன,

(அ) தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஒற்றுமைக்கு தடையாக அமைகின்றவை தொடர்பாக அவதானம் செலுத்துதல்.

(ஆ) இந்நாட்டின் தேசிய சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்வதற்கும் இலங்கையில் வசிக்கும் பல்வேறு இனத்தவர்களும் அர்ப்பணிப்புச் செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பின்னணி.

டீ.ஆர்.விஜயவர்த்தன- பொன்னம்பலம் அருணாச்சலம் 1917 ''எமது அரசியல் தேவைகள்" இது பாரிய முயற்சியின் ஆரம்பமாகும். அரசியலமைப்பு சீர்திருத்தச் சங்கம், பின்னர் தேசிய சங்கத்துடன் இணைந்து மறுசீரமைப்பிற்காகக் குரல் எழுப்பினர்.

1911 அரசியலமைப்புச் சட்டசபை தேர்தலில் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் வெற்றிபெற்றார்.

இராமநாதன் அவர்கள் - 1645
மாகஸ் பெர்ணாந்து - 981
மேலதிக வாக்குகள் - 664

சிங்கள மன்னனின் இராணுவத்தின் ஒரு பிரிவினராக சர்வஜன வாக்குரிமை அதிகாரம் வழங்கும்போது திரு. கலீல், டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் பிரதான தலைவர்கள் சாட்சியமளிக்காமையால் ஆணைக்குழுவானது வேறு வழியில் கவனம் செலுத்தியது. டுமன்பீல் கலீலை கோல்பேஸ் ஹோட்டலிற்கு அழைத்து, இந்நாட்டின் அரசியல் நிலை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு என்பன தொடர்பாகக் கேட்டறிந்துக் கொண்டார். அதன்போது தாம் சர்வஜன வாக்குரிமையை ஏற்றுக்கொள்ளத் தயார் எனக் குறிப்பிட்டார். இலங்கை தேசிய சங்கதிதன் ஏனைய அனைத்து உறுப்பினர்களும் சர்வஜன வாக்கெடுப்பிற்குப் பதிலாக சுதந்திரத்தை வேண்டி நின்றபோதிலும் மிகவும் நுட்பமான முறையில் செயற்பட்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முதற்படியாக சர்வஜன வாக்கெடுப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தார்.

சிங்கள மன்னனின் சமய ரீதியிலான நட்புத்தன்மை

(இ) ஒவ்வொரு இனத்தவர்களினதும் சமய, சமூக மற்றும் கலாசார, மற்றும் சமூக விடயங்கள் தொடர்பாக விழிப்பூட்டல்.

(ஈ) இந்நாட்டின் பல்வேறு இனத்தவர்களும் ஒவ்வொரு இனத்தவரதும் கலாசாரம் மற்றும் சமூகப் பிரிவின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, கலை, இலக்கியம், நிர்மாணத்துறை, சிற்பக்கலை

(உ) நாட்டின் இரு மொழிகளதும் வளர்ச்சிக்காக நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.

(அச்சு, செவிப்புல, கட்புல மொழிக் கற்கைக் கருவிகள்)

(ஊ) இந்நாட்டின் பல்வேறு சமயங்களின் ஊடாகவும் தேசிய ஒற்றுமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்தல்.

இதற்காக ஊடகங்களினால் மேற்கொள்ளக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள்

அகில இந்திய வானொலி, முஸ்லிம் மக்களின் நன்மை கருதி மேற்கொள்கின்ற முஸ்லிம் மக்கள் மற்றும் குடும்பங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

**முக்கியமான சமய மற்றும் ஏனைய விழாக்கள்.**
(பல்வேறு இனத்தவர்களது) அது தொடர்பான முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டு விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அடி மட்டத்திலிருந்து முக்கியமாக கல்வி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு கிராமிய மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

## தொலைக்காட்சி

### இந்திய தூதரகம்

கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், நேர்முகக் கலந்துரையாடல்கள், குழு ரீதியான கலந்துரையாடல்கள், கலர் நிகழ்ச்சித் திட்டங்கள், இளைஞர்களிடையே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள்.

இதன்போது மக்களிடையே ஆர்வம் ஏற்படக்கூடியவாறு இயங்குகின்றது.

பாடல்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் என்பன பாரிய தாக்கம் செலுத்துகின்றன.

நிகழ்ச்சித் திட்டங்களில் மக்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு போட்டிகளை நடத்துதல், கட்டுரைகள், வாதங்கள், செயலமர்வுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்கள், தேசபக்தி பாடல்கள், சித்திரங்கள், போன்ற புரிந்துணர்வை விருத்தி செய்யக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள்.

## பத்திரிகை சபை

### தீங்கற்ற செய்தி அறிக்கையிடல்

யாதேனுமொரு நிகழ்ச்சி தொடர்பாக தகவல்களை வழங்கும்போது அந்த சம்பவம் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் மறைக்காது மக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

யாதேனுமொரு சம்பவத்தினை மறைப்பதாயின் அல்லது திரிவுபடுத்தல் அல்லது போலியான தகவல்களை வழங்குதல், பக்கச்சார்பாகச் செயற்படல் போன்ற பல்லின சமூகம் ஒன்றிலே பிரச்சினைகளை தேற்றுவிப்பதற்குக் காரணமாக அமையும்.

2008ஆம் ஆண்டிலே பிரசித்தி பெற்ற இந்து மதகுரு ஒருவருக்கு எதிராக ஒரு செய்தி வெளியிடப்பட்டது. அது மாத்திரமன்றி பல்வேறு ஊடகங்கள் மற்றும் வரைவிலக்கணங்கள் என்பவற்றினையும் வெளியிட்டது. இது தொடர்பாக உண்மை நிலையினை வெளிப்படுத்துவதற்காக ஊடகவியலாளர்கள் மாநாடொன்று கூட்டப்பட்டதுடன், அதன் நோக்கம் ஏனையோருக்கும் கருத்துத் தெரிவிக்க இடமளித்தமையாகும். எனினும், இது தொடர்பாக பிரதான பத்திரிகைகள் எதுவித இடத்தையும் ஒதுக்கவில்லை. அவர்கள் அந்த செய்தியின் ஒரு பக்கத்தை மாத்திரமே வெளியிட்டனர். இதன் மூலம் பக்கச்சார்பு தெளிவாகின்றது.

இலங்கை தொடர்பாகவும் உதாரணமொன்றைக் குறிப்பிட முடியும். 2006.06.07ஆம் திகதி பிரசித்தி பெற்ற பத்திரிகை ஒன்றில் ''முஸ்லிம் வாலிபர் ஒருவர் மேதானந்த தேரரின் பாத்திரத்திற்கு காலால் உதைத்தார்'' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டது. முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களிடையே ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு காரணமாக அமைந்த இச்செய்தியானது ஒரு பக்கத்தை மாத்திரம் வெளிக்காட்டியிருந்தது. இதன் உண்மை நிலையினை அறிவதற்கு மறுபக்கம் தொடர்பாகவும் கருத்துக் கூறுவது தேவையெனக்கூறி முஸ்லிம் சங்கமொன்று அப்பத்திரிகையிடம் வேண்டுகோள் விடுத்தது. எனினும் அதற்கு அந்தப் பத்திரிகை வாய்ப்பளிக்கவில்லை.

1966 ஜனவரி 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் தொடர்பாகவும் இரு வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் உணர்ச்சிபூர்வமாக செய்தியினை வெளியிட்டிருந்தன. ஒரு பத்திரிகை ''தேசம் சுடுகாட்டில்" என்று கூறியது. மற்றையது மக்கள் போராட்டத்திற்குத் தூண்டியது.

உணர்ச்சித் தன்மையினை ஊடகங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மக்களுக்கு உண்மையான தகவல்கள் வழங்க வேண்டிய போதிலும் நாம் வெளியிடும் செய்தியின் மூலம் மக்களிடையே உணர்ச்சிபூர்வமான தூண்டுதல்கள் ஏற்படுமாயின் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும். அதன்மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகள் அல்லது அரசியல் பிரச்சினைகள் மற்றும் ஒரு பிரச்சினைக்கு இலகுவில் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய வாய்ப்பு இல்லாமல போகிறது.

உதாரணம் : 1965 மார்ச் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம்

செய்திகளை உருவாக்குதல் அல்லது தமக்கு சாதகமானதாக மாற்றிக்கொள்வதிலிருந்து விலகுதல்.

இதன் காரணமாக பொது மக்கள் உண்மையான செய்தியை அறிந்துகொள்வதற்கு தடையாக அமைவதுடன், பல்வேறு இனத்தவர்களிடையே தவறான கருத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

உதாரணம் : Times Of India பத்திரிகை சீன எல்லையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு காரணமாக ITPB ஜவானுக்கு காயமேற்பட்டதாக தலைப்புச் செய்தியொன்றில் குறிப்பிட்டிருந்தது. இச்செய்தியை இருநாட்டு அதிகாரிகளும் மறுத்திருந்தனர். ஊடகங்கள் எந்நேரமும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் எனும் வாசகத்தைப் பயன்படுத்தி அதற்கு உண்மை வடிவத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றன. இது தொடர்பாக Times Of India நிருபர்கள் இருவருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு இந்திய உள்ளக அலுவல்கள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரில் சுமார் 70 வீதத்தினர் வெள்ளையர்களாகக் காணப்படுவதுடன், 20 வீதம் கறுப்பு இனத்தவர்களினால் இடம்பெறுகின்றது. எனினும் அந்நாட்டு ஊடகங்கள் அதனை தலைகீழாக மாற்றி இக்குற்றச் செயல்களில் ஈடுபடுவோரில் 60 வீதம் கறுப்பு இனத்தவர்கள் என்றும் வெளியிடப்படுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறான விடயங்கள் பல்லின சமூகமொன்றிலே பல பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைகின்றன. எனவே, உண்மையான செய்திகளையும், நடுநிலையான செய்திகளையும் வழங்குவதில் ஊடகங்களுக்குப் பாரிய பொறுப்புக் காணப்படுகிறது. தொழில்சார் ஒழுக்க நெறிகள் இங்கு கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

ஊடகங்கள் தகவல்களை வெளியிடும்போது சம்பவத்தின் முக்கியத் தன்மையினை உணர்ந்து பக்கச் சார்பற்ற முறையில் செயற்பட வேண்டியமை கட்டாயமானதாகும். பல்லின சமூகமொன்றிலே இது மிகவும் முக்கியமானதாகும்.

'The Hindu' பத்திரிகையின் கொல்கொத்தா வெளியீட்டிலே காஷ்மீர் மற்றும் மணிப்பூர் ஆகிய இடங்களில் இடம்பெற்றுவரும் வன்முறைகளின் அளவில் மார்க்கங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தன. 2010ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட இரண்டு மாதகாலப் பகுதியினுள் மணிப்பூர் பிரதேசத்தில் வன்முறைகள் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை காஷ்மீரிலும் பார்க்க 6 மடக்கு அதிகமாகக் காணப்பட்டது. எனினும், பிரதான பத்திரிகைகள் மணிப்பூர் சம்பவத்தைவிடவும் காஷ்மீருக்கே முக்கியத்துவம் வழங்கி இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

"Times Of India" காஷ்மீரில் 48, மணிப்பூரில் 02

இலங்கையிலும் இவ்வாறான சம்பவங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

- பெண்கள் துன்புறுத்தப்படல்
- வடக்கு, கிழக்கு விதவைகளின் நிலை
- சிங்கள, தமிழ், முஸ்லிம் தவிர்ந்த ஏனைய சமூகத்தினர்

Gans தொலைக்காட்சி வலையமைப்பு, சஞ்சிகை Elite சட்டம் மற்றும் ஒழுக்கமுறையற்ற விடயங்களுக்கு 70 வீதமும் சிவில், உரிமை மீறல்களுக்கு 7 வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மோதல் தவிர்ப்பு

பல்லின சமூகமொன்றிலே சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும், மோதல் தவிர்ப்பிலும் ஊடகங்களுக்குப் பாரிய பொறுப்புள்ளது. இங்கு ஊடகங்கள் சுயாதீனமாகவும், பொறுப்புடனும் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிடக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். ஜனநாயகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த செயற்பாடுகளுக்கு இது பெரிதும் உதவும். சமாதானம் தொடர்பாக ஊடகங்களின் பொறுப்பானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இதன்போது 'PEACE JOURNALISM' எண்ணக்கரு முக்கியமானதாகும். இங்கு பிபிசி வெளிநாட்டுச் சேவையின் செய்தியாளர் GORDEN CORE குறிப்பிடுவதன் பிரகாரம் பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட சமூகங்களுக்கு தகவல் வெளியிடுவது கடினமானதொரு விடயமாகக் காணப்படுவதுடன், இங்கு ஊடகவியலாளர்கள் தமது நடுநிலையான தன்மையிலிருந்து விடுபடுவது கடினமானதொரு விடயமாகக் காணப்படுகின்றபோதிலும் தற்போது PEACE JOURNALISM" இற்கான காலம் பிறந்துள்ளதாகவும், மோதல் தவிர்ப்பு செயற்பாடுகளுக்கு ஆர்வமூட்டல் வேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக GEORGE PAPAGIANNIA செக் நாட்டின் "The Bridge" வானொலி நிகழ்ச்சி ஒன்றினை ஆரம்பித்தார். கீழ்மட்ட மக்களுக்கு வாதிடுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

போல்கன் பிரதேசங்களில் பெற்ற அனுபவம் ஊடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மோதல் தவிர்ப்பு தொடர்பாக ஊடகத்தின் பொறுப்புக்கள் தொடர்பாக குறிப்பிடப்படுகின்றன. பல்வேறு இனத்தவர்கள் வசிக்கும் சமூகங்களில் பொறுமை, சமாதானம் என்பன தொடர்பாக ஒற்றுமையுடன் பணியாற்றும் நபர்களுக்குக் குரல்கொடுக்கக் கூடிய இயலுமை உள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். இன முகாமைத்துவ செயற்பாடுகளின் போது நடுநிலையான முறையில் அறிக்கையிடல், ஊடக அவதானிப்புக்கள், தரம் என்பன இன்றியமையாதன. அதற்காக ஊடகவியலாளர்களின் பயிற்சியானது அத்தியாவசிய விடயமொன்றாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சர்வதேச உறவுகளின் போது நாடுகளுக்கிடையே புரிந்துணர்வில் பாதிப்பினை ஏற்படுத்தாதவாறு செய்திகளை வெளியிடல்

யாதேனுமொரு நாட்டிலே ஏற்படக்கூடிய உள்ளக சம்பவம் தொடர்பாக வேறொரு நாட்டில் அல்லது நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பான செய்திகளை வெளியிடும்போது ஊடகங்களுக்குப் பாரிய பொறுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. உள்நாட்டு இனத்தவர்களின் ஒற்றுமையில் பங்கம் ஏற்படாதவாறான செய்திகள் இதன்போது முக்கியமானவையாகக் காணப்படும்.

இந்திய மீனவர்களும், இலங்கை மீனவர்களும் இரு நாடுகளால் கைதுசெய்யப்படுவது தொடர்பான விடயத்தினை இதற்கான சிறந்த உதாரணமாகக் குறிப்பிட முடியும்.



**கச்சி மொஹமட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடக நெறிமுறைகள்

இங்கு குழுமியிருக்கும் ஊடகவியலாளர்கள் முன் பேசும் போது எனக்கு ஒரு வித அச்சமும் ஏற்படுகிறது. ஏனெனில் ஊடகத்துறையில் நான் காலடி எடுத்து வைத்த போது எனக்கு கைகொடுத்த மூத்த ஊடகவியலாளர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் முன்தான் நான் பேச வேண்டியிருக்கிறது.

ஆசாரக் கோவை பற்றி நாங்கள் பேசுவது என்றால் இரண்டு நாட்களாவது தேவைப்படும். முதலாவதாக ஊடகவியலாளர்களாகிய நாங்கள், கேட்பதை பார்ப்பதை அப்படியே எழுதும் பார்வையாளர்களாக இருக்க வேண்டுமா? இல்லாவிட்டால் ஒரு கொள்கையை ஒரு சித்தாந்தத்தை அறிந்து இருக்க வேண்டுமா?

இதனை சிலர் இப்படியும் சிந்திக்கலாம். எனினும் கேட்பதை, பார்ப்பதை அப்படியே எழுதுவதாக இருந்தால் உதாரணமாக ஒரு கொலை நடக்கிறது. பயங்கர காட்சி, இந்த பயங்கர காட்சியை நாங்கள் தொலைக்காட்சியில் காட்ட முடியுமா? நாங்கள் சம்பவத்தை நேரில் கண்டு விட்டோம். படத்தையும் எடுத்து விட்டோம். இந்தத் கொலையை காட்டலமா?

ஒரு கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்த பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயரை வெளியிட முடியுமா? கண்டதை கேட்டதை அப்படியே எழுத முடியுமா? அல்லது காட்ட முடியுமா? முடியாது. ஏன்? நாங்கள் ஒரு அறிக்கையை ஒரு சித்தாந்தத்தை கடைப்பிடிக்கிறோம். எங்களுக்கென்று ஒரு கலாசாரம் இருக்கிறது. ஒரு நாகரீகம் இருக்கிறது. எனவே இதனை சார்ந்துதான் செயற்படுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இவற்றைப் பின்பற்றுவதுதான் ஒழுக்க நெறிமுறைகளை பேணுவதாகும். தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயம் ஒன்றை எடுத்துக் கொள்வோம். ஒரு உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டுகிறேன். அலரி மாளிகையை சுற்றியுள்ள உயர்ந்த கட்டடங்களிலே ஒரு காலத்தில் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. இவற்றில் ஒன்றில் புகைப்படத்தை நீங்கள் எடுத்திருந்தால் அந்த படத்தை நீங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க முடியுமா? முடியாது. ஏன்? ஏதோ ஒரு காரணம். தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயம். இருப்பதை அவ்வாறே ஊடகத்தில் வெளியிட்டு விட முடியாது. அதற்கு சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இவற்றைத்தான் ஆசாரங்கள், ஒழுக்க நெறிகள் என்று குறிப்பிடுகிறோம்.

ஊடகவியலாளர்களுக்கு மட்டுமல்ல. ஆசிரியர்கள், டாக்டர்கள், சட்ட வல்லுநர்கள் போன்றோருக்கும் ஆசாரக் கோவைகள் உள்ளன.

ஊடகவியலாளருக்கான ஒழுக்க நெறிக் கோவைகளை நீங்கள் கண்டிருக்கலாம். 1981ம் ஆண்டு அக்டோபர் 14ஆம் திகதி அரசாங்கம் ஊடகவியலாளருக்காக அரச வர்த்தமானி மூலம் முதல் முதலாக ஆசாரக் கோவையை வெளியிட்டது.

அதே போல பத்திரிகைச் சபையும் (Press Council) ஒன்றை வெளியிட்டிருந்தது. இப்போது சுருக்கமாக ஆசிரிய சங்கம் வெளியிட்ட ஆசாரக் கோவைதான் பலரது கரங்களிலும் இருக்கிறது. இவற்றில் முக்கியமாக 12 வாசகங்கள் உள்ளன. மற்றுமொரு ஆய்வுக் கோவை அவுஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. இது சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக 7 வாசகங்கள் உள்ளன. எத்தனை வாசகங்கள் இருந்தாலும் அவற்றை 5 பிரிவாக பிரிக்கலாம்.

1. உண்மையைச் சொல்ல வேண்டும். (உண்மையும் பிழையற்ற தன்மையும்)
2. நாங்கள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்
3. எங்களால் ஏற்படும் தீங்கை குறைப்பது
4. சுயாதீனத் தன்மையை பாதுகாத்துக் கொள்ளுதல்
5. பொறுப்புணர்ச்சி அல்லது பொறுப்புக் கூறுதல் இவை ஐந்தும் தான் ஆசாரக் கோவையின் அல்லது ஒழுக்க நெறியின் அடிப்படை எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க நெறிக் கோவை அல்லது ஆசாரக் கோவை என்பதிலே 500 வாசகங்கள் இருக்கலாம். எனினும் மேற்கூறப்பட்ட 5 விடயங்களுக்குள் அவை அனைத்தும் அடங்குகின்றன.

இந்த ஆசாரக் கோவைகளை ஊடகவியலாளர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் சிறந்த ஊடகவியலாளர்களாக சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ முடியும்.

எம். எஸ். எம். ஐயூப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரமும் அவதூறுச் சட்டமும்

எனக்கு வழங்கப்பட்ட தலைப்பு அவதூறுச் சட்டம். அவதூறு சட்டம் என்பதை விட கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரமும், அவதூறுச் சட்டமும் என எனது தலைப்பை எடுத்துப் பேசுகிறேன்.

கருத்தை வெளியிடுவதற்கு எமது அடிப்படை உரிமை முக்கியமானது. அடிப்படை உரிமை என்றால் என்ன? உங்களுக்குத் தெரியும், இலங்கையில் 1978ம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பில் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் அடிப்படை உரிமை ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதாவது நாங்கள் மனிதனாக பிறக்கின்ற போது எங்களுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. அந்த வகையில் சிந்தனை செய்யும் மனிதன் சிந்தனை செய்வது மட்டும் போதுமானதல்ல. சிந்தனை செய்து கருத்துக்களை நாமே வைத்துக் கொள்வதால் எந்தவித பயனுமில்லை. சிந்தனை செய்வதை வெளிப்படுத்தும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது. இதே போன்று கருத்து வெளியிடும் சுதந்திரம் நீதிமன்றங்களால், சர்வதேச நீதிமன்றங்களால் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

இதே போன்று தகவல்களைப் பெற்றுக் கொள்வது கூட கருத்து வெளியிடும் சுதந்திரத்தில் ஒன்று.

நாம் ஏன் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் சமூகத்தில் பூரணமாக வாழ வேண்டும் என்றால் எங்களுக்கு தகவல் என்பது முக்கியமானது. ஊடகவியலாளர்கள் என்ற வகையில் தகவல்களை சமூகத்திற்கு வழங்குவதிலே மிக முக்கிய அங்கம் வகிக்கின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக அறிவை பரம்பலாக்கல். ஒரு இணையத்தளத்திலே ஒரு தகவலை உலகத்தில் எல்லோரும் பார்க்கும் விதத்தில் தெரியப்படுத்துகிறார்கள். ஓர் இடத்தில் நடக்கின்ற விடயத்தை உலகில் எல்லோரும் அறிந்து கொள்ளும் விதத்தில் தெரியப்படுத்துகிறார்கள்.

நாங்கள் அறிவு சார் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் கருத்து வெளியிடும் சுதந்திரத்தில் இதுவும் ஒரு அங்கமாகும். கருத்து வெளியிடும் சுதந்திரம் என்றால் என்ன? கருத்தை எவ்வாறு வெளியிடலாம்? எதனூடாக வெளியிடலாம்?

ஊடகவியலாளர்கள் என்ற வகையில் தொலைக்காட்சியினூடாக, பத்திரிகையினூடாக வெளிப்படுத்த முடியும். தொலைக்காட்சியில் செய்திகளை வாசிப்பதன் மூலம், பத்திரிகையில் செய்திகளை பிரசுரிப்பதன் மூலம், கார்டுன் படங்களை வரைவதன் மூலம் கருத்துக்களை வெளியிடுகின்றோம்.

எழுத்து மூலமாக, காட்டுன் மூலமாக மக்களுக்கு கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற போது மக்களை கவர முடிகின்றது. கருத்து வெளியிடும் சுதந்திரம் என்கின்ற போது சில அடிப்படை விதிகள் உள்ளன.

சட்டத்தால் கருத்து வெளியிடும் சுதந்திரம் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளதா? இப்போது உங்கள் அனைவருக்கும் ஒரு சந்தேகம் எழத்தோன்றும். சட்டத்தில் ஏன் இந்த உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்? மனித உரிமையாக்கப்படுகின்ற போது நாங்கள் நீதிமன்றத்தில் சென்று பரிகாரம் பெற வேண்டும் என்றால் அவை எழுத்து மூலமான சட்டமாகவோ அல்லது வழக்காடு சட்டமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

நான் முன்பு குறிப்பிட்டது போன்று 1970ம் ஆண்டு அரசியலமைப்பில் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் அடிப்படை உரிமை ஒன்றாக குறிப்பிட்டுள்ளது. இரண்டாவதாக சமூகத்தில் மனிதனுக்கு எவ்வகையான மதிப்பு இருக்கின்றது? இந்த மனிதனுக்குரிய மதிப்பை மதிக்கின்ற வகையிலே எமது கருத்து வெளியிடும் சுதந்திரம் இருக்க வேண்டும். அதாவது ஒரு மனிதனின் கௌரவத்திற்கு ஊறு அல்லது பங்கம் விளைவிக்காத வகையில் இந்த உரிமையை பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஜனநாயக சமூகத்தில் வாழ்கின்றோமேயானால் இந்த உரிமைகள் மிகவும் அவசியம். எமக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை பூரணமானதா? அல்லது இதற்கு மட்டுப்பாடுகள், வரையறைகள் உண்டா?

மனித உரிமைகளை பொருத்த வரையில் சில முழுமையான உரிமைகள் இருக்கின்றன. உதாரணம் ஒருவரை சித்திரவதைக்கு உள்ளாக்கக்கூடாது. இது ஒரு முழுமையான உரிமை. ஒரு சந்தர்ப்பத்தில் எந்த ஒரு குற்றத்திற்காக ஒருவரை சித்திரவதைக்கு உள்ளாக்கக் கூடாது. இது ஒரு முழுமையான மனித உரிமை.

எனினும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஒரு முழுமையான சுதந்திரம் அல்ல. இது மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. நாங்கள் கருத்தை வெளியிடுகின்ற போது சட்டத்தால் சில வரையறைகள் செய்யப்படுகின்றன. ஆகவே அந்த வரையறைக்கு உட்பட்டு நாங்கள் கருத்து வெளியிடுவோமேயானால் நீதிமன்றத்திலே அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டியதில்லை.

கருத்து வெளியிடும் போது ஆசாரக் கோவையை கடைபிடிப்பீர்களேயானால் சட்டச் சிக்கலுக்கு முகம் கொடுக்கமாட்டீர்கள். இந்த ஆசாரக் கோவைக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளன.

கருத்து வெளியிடுவதற்கான மட்டுப்பாடுகள் நியாயபூர்வமாக இருக்க வேண்டும். கருத்து வெளியிடும் போது மக்களுக்கு தேவையான சில விடயங்களை சில தலையீடுகளின் காரணமாக முழுமையாக வெளியிட முடியாத நிலை ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுகின்றது. ஆனால், சட்டம் அதனைக் கூறவில்லை. ஒரு சமூகத்தினுடைய தேசிய பாதுகாப்பு நலனுக்கு எந்த வகையில் தேவையோ, அந்தளவிற்கு உரிமை மட்டுப்படுத்தப்படலாம். இலங்கையை பொறுத்த வரையில் நாங்கள் மட்டுப்பாடு, பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு அவதூறு தொடர்பாக மட்டுப்பாடுகளும் உண்டு.

எமது நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்களாக நாம் இருந்தாலும் சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். மனித உரிமை என்ற அடிப்படையிலே அரசியல் குடியியல் உரிமைக்கான சர்வதேச சாசனத்தின் 19ஆம் பந்தியில் ஒவ்வொருவருக்கும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உரிமை கண்டிப்பாக இருக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவிதமான தலையீடுகளும் இல்லாமல் உங்களுக்கும் கருத்துக்களை கொண்டிருக்கிற உரிமை இருக்கிறது.

கருத்துக்களை வெளிப்படுத்தும் போது என்ன வடிவில் வெளிப்படுத்துகின்றோம்? எழுத்து மூலமாக, அச்சு மூலமாக எந்த ஊடகத்தினூடாக வெளிப்படுத்துகின்றோம் என்பதை தெரிவு செய்ய வேண்டும்.

என்ன வடிவிலேனும் எவ்வாறு கருத்துக்களை வெளிப்படுத்தலாம். ஆனால் சட்டம் சில மட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்த மட்டுப்பாடுகளை மதித்து நடக்க வேண்டும். மக்களை சென்றடைய வேண்டும் என்ற கோணத்தில் சில சுவாரஷ்யமான செய்திகளை வெளியிடுகிறோம். இதே செய்தியினூடாக ஒருவரை ஏளனப்படுத்துவதாக அல்லது அவரை சமூகத்தில் குறைத்து மதிப்பிடுவதாக இருந்தால் எமது உண்மையான நோக்கம் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஆகவே, கருத்து வெளியிடுகின்ற போது அடுத்தவரது உரிமையை மதிக்க வேண்டும். சட்டத்தால் எல்லோரும் சமம் என்பதை உணர வேண்டும். சட்டம் எவரையும் வேறுபடுத்தி காட்டவில்லை.

ஆனால் எம்மத்தியில் பல காரணங்களுக்காக வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றை வெளிப்படுத்துகின்ற போது ஒருவருடைய மனதை புண்படுத்தும் விதத்தில் செயற்பட்டால் சட்டம் அதனை ஏற்றுக் கொள்ளாது.

ஏன் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் அவசியம்? இதற்கு நியாயமற்ற முறையில் மட்டுப்பாடுகளை வைத்திருந்தால் சுதந்திரமாக கருத்தை வெளியிட முடியாது. சட்டத்தை பொறுத்தவரையில் நீதித்துறை, நிர்வாகத்துறை, சட்டவாக்கத்துறை என்ற மூன்று முக்கிய துறைகளைப் பற்றி கூறுகின்றது. இன்று நான்காவதாக ஊடகத்துறையையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஊடகத்துறை மிகவும் பலம் வாய்ந்தது. சட்டத்தால் செய்ய முடியாத சிலவற்றை கூட நாங்கள் இந்த ஊடகம் மூலமாக செய்யலாம். நாளாந்தம் நடக்கும் ஊழல் நடவடிக்கைகளைக் கூட மக்கள் தெரிந்து கொள்ளும் விதத்தில் வெளிப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அரசு நிர்வாகத்தை செய்யும் போது மக்களிடமிருந்து அறவிடப்படுகின்ற வரிப்பணத்திலிருந்து தான் சேவைகளை செய்து வருகிறது. ஆகவே மக்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணம் முறையற்ற வகையில் அதிகாரிகள் அல்லது ஆட்சியிலிருப்பவர்களால் ஊழல் மோசடிகள் செய்யப்பட்டால் அதனை வெளிப்படுத்துவதற்கு பிரதான கருவியாக அமைவது ஊடகத்துறையே. அந்த வகையில் ஊழலை தடை செய்வதற்கு ஒரு கருவியாக அமைகிறது.

தகவல் பெற்றுக் கொள்வதற்கான சட்டம் பற்றி இன்று பேசப்படுகின்றது. இந்தியாவில் இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறது. இந்தச் சட்டம் இங்கு கொண்டுவரப்பட்டால், எந்த அரச நிறுவனமாக இருந்தாலும் சரி மக்களுக்கு தகவல் வழங்க வேண்டிய கடப்பாட்டுக்கு உரித்துடையவர்கள் ஆகிறார்கள்.

உள்ளூராட்சி சபைகளுக்கு நாம் வரி செலுத்துகிறோம். அந்த வரியின் ஊடாக குறிப்பிட்ட உள்ளூராட்சி சபை மக்களுக்குத் தேவையான சேவையை செய்யத் தவறினால், தகவல் பெறுவதற்கான சட்டம் அமுலில் இருந்தால் இந்த பணத்திற்கு என்ன செய்தீர்கள் என்ற கேள்வியை கேட்க முடியும். அவர்கள் செய்கின்ற எல்லா நடவடிக்கைகக்கும் வெளிப்படையானதாக இருக்கும். அத்துடன் பொறுப்பு கூட வேண்டியவர்களாகவும் இருப்பார்கள்.

ஒருவருடைய தனிப்பட்ட விருத்திக்கும் தகவல் மிக முக்கியமானது. ஒவ்வொருவருடைய கௌரவத்தைப் பாதுகாத்தல் மற்றும் கருத்து வெளியிடுவதற்கும் சுதந்திரம், தகவலை பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் என்பன முக்கியமானவை. குறிப்பாக ஊழலை இல்லாமல் செய்வதற்கும் ஊடகம் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக அமைகிறது.

ஒருவருக்குள்ள தனிப்பட்ட கௌரவத்திலிருந்து அவரை குறைத்து மதிப்பிடுகின்ற போது அதனை நாம் அவதூறு என்கிறோம். பெரிய பதவியிலிருக்கும் நபர்களுக்கு மட்டும்தான் கௌரவம் இருக்கிறது என்று பிழையாக விளங்கிக் கொள்ளக் கூடாது. சமூகம் ஒவ்வொருவரையும் எவ்வாறு பார்க்கிறது என்று பார்க்க வேண்டும். வீதியிலிருக்கும் பிச்சைக்காரனுக்கும் கௌரவம் இல்லையென்று கூற முடியாது. ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனும் தான் வாழ்கின்ற சூழலுக்கு ஏற்ப தன்னுடைய கௌரவத்தை விட்டுக் கொடுக்க மாட்டான்.

இதே போன்றுதான் ஊடகவியலாளர்கள் என்ற ரீதியில், செய்திகளை வெளியிடும் போது இதில் என்ன கூறப்படுகிறது என்பதை சிந்திக்க வேண்டும். நான் இப்படி எழுதுவதால் குறிப்பிட்ட நபரின் கௌரவம் பாதிக்கப்படுமா என சிந்திக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு திருமணம் நிலைத்திருக்கின்ற போது மற்றொரு திருமணம் முடிக்க கூடாது. இது சட்டப்படி குற்றம். எனினும் x என்ற நபர் இருதார குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக நீங்கள் செய்தியொன்றை வெளியிட்டிந்தால் x என்ற நபரின் பெயரையும் குறிப்பிட்டிருந்தால் அவதூறு ஏற்பட்டிருகிறதா? என்று பார்த்தால் அவதூறு இடம்பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். இது உண்மையான விடயம். நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. உண்மையான ஒரு சம்பவத்தை வெளிப்படுத்துவது அவதூறு ஆகாது. எனினும் உண்மை என்பதை நிரூபிப்பதற்கான சான்று உங்களிடம் இருக்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் இதனை நிரூபிக்க வேண்டிய அவசிம் இல்லை.

இதே வேளை திருமணமாகாத x என்ற ஒரு நபரும் y என்ற யுவதியும் உல்லாச விடுதியொன்றில் உல்லாசமாக தங்கியிருந்து இரண்டு நாட்களை கழித்தனர் என்ற ஒரு செய்தியை அந்த இருவரினதும் பெயரை குறிப்பிட்டும், இடத்தை குறிப்பிட்டும் செய்தி வெளியிட்டிருந்தால் அவதூறு ஆகுமா? நிச்சயமாக இது அவதூறுதான்.

அந்த இருவரும் உல்லாச விடுதியிலிருந்தார்கள் என ஒருவரிடம் மாத்திரம் சொல்வதன் மூலம் அவர்களது கௌரவம் பாதிக்கப்படமாட்டாது. இதே விடயத்தை பலர் கூடியிருக்கும் ஒரு கூட்டத்தின் நடுவே கூறும் போது அவதூறு ஏற்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் நீதிமன்றம் ஒன்று அவதூறு வழக்கு தொடர முடியும். உண்மையாக இருந்தாலும் அதனை நிரூபிக்கக் கூடிய சான்றுகள் உள்ளனவா? என்று பார்க்க வேண்டும்.

அவதூறு வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்காளியும் எதிராளியும் தங்கள் பக்கத்தின் நியாயத்தை நிரூபிக்க வேண்டும். தீய எண்ணத்துடன் தான் இந்த அவதூறு செய்யப்பட்டுள்ளதா? என்பதை வழக்காளி நிரூபிக்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

